விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 26, வெள்ளிக்கிழமை 11.11.2016 | கதிர் 06

வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள்
பொதிகள் சேவை
அருள் குளோபல்
எக்ஸ்பிரஸ்
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 6113


'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்பட்ட சமயம் நாடாளுமன்றில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

+ பருப்பு, உருளைக்கிழங்கு, ம.எண்ணெய், சமையல் வாயு விலை குறைப்பு
+ 175,000 மாணவர்கள், 28, 000 ஆசிரியர்களுக்கு 'டப்லெட்' கணினி
+ வடக்கு, கிழக்கில் 50,000 வீடுகள் அமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு
+ போக்குவரத்து தண்டப் பணம் ஆகக் குறைந்தது ரூ.2500/=

# சுமாரான 'பட்ஜெட்' புதிய வரிகள் விதிப்பு

கொழும்பு, நவம்பர் 11

**நல்லாட்சி அரசாங்கத்தின் 2ஆவது வரவு - செலவுத் திட்டம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. சாதாரண பொது மக்களுக்கு அதிக ஊக்குவிப்பைத் தராத அதேசமயத்தில், அளவுக்கு அதிகமான சுமைகளை ஏற்றாமல் ஒரு சுமாரான 'பட்ஜெட்' ஆக அது அமைந்தது. பல புதிய வரி விதிப்புகளுக்கு அது வழி செய்தது.**


நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவதும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 70 ஆவதுமான வரவு - செலவுத் திட்டம், நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

பிற்பகல் 1.58 மணியளவில் சபாநாயகர் சபைக்கு சமுகமளித்தார். 1.59 மணியளவில் சபை நடவடிக்கைகள் ஆரம்பித்தன. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பி.ப. 2.01 மணியளவில் வரவு–செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்க ஆரம்பித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் அந்த வேளையில் சபையில் சமுகமளித்திருந்தனர்.

"நாட்டில் நல்லதோர் அபிவிருத்

பக்கம் 20 >>>



## லஞ்ச, ஊழல் விசாரணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக சரத் ஜெயமான

கொழும்பு, நவ.11

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி சட்டத்தரணியான சரத் ஜெயமான நேற்று பதவியேற்றார்.

இதுவரை மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவிவகித்த ஜெயமான நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்

பக்கம் 20 >>>

## கனேடியத் தூதருடன் சம்பந்தர் சந்திப்பு


கொழும்புக்கான கனேடியத் தூதுவர் ஷேர்லி வைற்றினிங் அம்மையார் தலைமையிலான தூதரகக் குழுவினர் நேற்றுக் கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசினர். அச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.யும் பங்கு பற்றினார். அப்போது எடுக்கப்பட்ட படம்.

## 'பட்ஜெட்'டின் முக்கிய அம்சங்கள்

வரவு–செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு–

* இலங்கையின் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்த சமூக அபிவிருத்திக்காகப் பரந்த கொள்கையை அறிமுகம் செய்தல்.

* அறிவை மையப்படுத்திய பொருளாதார முறையை ஏற்படுத்துவது அரசின் நோக்கம்.

* விவசாயம், மரக்கறி மற்றும் பழவகை உற்பத்திக்கு 100இற்கு 50 வீத கடன் வட்டி நிவாரணம்.

*தேயிலை, றப்பர், தெங்குக்கான தானியங்கு வர்த்தக பொருள் பரிமாற்ற செயன்முறை. இதற்காக 75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

பக்கம் 20 >>>

## ரி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட 11 பேர் தொடர்பாக முறைப்பாடுகள்

*யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு*


யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு நாள்களுக்குள் 11 இளைஞர்கள் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந் திய இணைப்பதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்தார்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த 5 ஆம் திகதி மூன்று இளைஞர்களும், 6 ஆம் திகதி மூன்று இளைஞர்களும், 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் மூன்று இளைஞர்களும் 9 ஆம் திகதி ஒருவரும் 10 ஆம் திகதி ஒருவருமாக 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் வாள்வெட்டுக்கள், பொலி

பக்கம் 20 >>>

### அளப்பு அருணாசலம்


'டப்'பைக் கொடுத்தால் படிப்பு வருமோ... கெடுமோ...? நல்லூரானுக்குத்தான் வெளிச்சம்...

## தெரிவாகி 24 மணி நேரத்திலேயே ட்ரம்ப் முதலாவது குத்துக்கரணம்

வொஷிங்டன், நவ.11

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்குள் முதலாவது குத்துக்கரணத்தை அடித்தார் டொனால்ட் ட்ரம்ப். தேர்தல் விவகார சமயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக தீவிரமாகக் குரல் எழுப்பி வந்த ட்ரம்ப், அதன் மூலம் வெள்ளை இனத்தவர்கள் மத்தியில் இனவாத வாக்குகளைச் சுருட்டிக் கொண்டார்.

தாம் ஜனாதிபதியானால் அமெரிக்காவில் அனைத்து முஸ்லிம்களுக்கும் தடைவிதிக்கப்படும் என்றும் கூட அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

2015 நவம்பரில் பாரிஸில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, வெளியிட்ட அக்கருத்து 2015 டிசெம்பர் 7 ஆம் திகதி

பக்கம் 20 >>>

*ட்ரம்பின் வெற்றியால்*

# இலங்கை அரசின் மீதான அமெரிக்காவின் அழுத்தம் குறையும் என்பதை ஒப்புக்கொள்கின்றார் சுமந்திரன்



கொழும்பு, நவ.11

"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றியீட்டியிருக்கின்றமையால் அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் சில மாற்றங்கள் ஏற்படக் கூடும். இலங்கையைப் பொறுத்தவரை யுத்தத்தின் பின்னரான விடயங்களில் இலங்கை அரசு மீது அமெரிக்கத் தரப்பு கொடுத்து வந்த அழுத்தத்தில் தொய்வு ஏற்படலாம். ஆனாலும், அதையும் சமாளித்து நாம் விடயங்களை முன்னெடுக்க முடியும் என முழுமையாக நம்புகிறோம்."

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

ட்ரம்பின் வெற்றி, இலங்கை விவகாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"மனித உரிமைகள் விவகாரம், பொறுப்புக்கூறல், போர்க் காலச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகள் போன்றவை தொடர்பாகவும் ஐ.நா.மனித

பக்கம் 20 >>>

# பலத்த காவலுக்கு மத்தியிலும் கஞ்சா கடத்தல்! வேலியே பயிரை மேய்கிறதா எனச் சந்தேகம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கி விசனம்



யாழ்ப்பாணம்,நவ.11

"வடபகுதியில் எம்மைச் சுற்றி ஒன்றரை லட்சம் படையினர். அதற்கு மேலதிகமாக கடற்படை, விமானப்படை, பொலிஸ் என மேலதிக படைகள் எம்மைச் சுற்றி வலம் வருகின்றன. கடலோரப் பாதுகாப்பு மிகவும் இறுக்கமாக்கப்பட்டுள்ள நிலையில் கடல் வழியாகக் கஞ்சாப் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. இவ்வளவு பாதுகாப்பையும் தாண்டி போதைப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றதாயின் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளில் எங்கேயோ ஓட்டைகள் காணப்படுகின்றன என்றே அர்த்தம். வேலியே பயிரை மேய்ந்து வருகின்றதோ என்ற சந்தேகமும் கூட எழுகின்றது.

– இவ்வாறு கேள்வி எழுப்புகின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டதும், போரினால் பாதிக்கப்பட்டதுமான குடும்பங்களின் சுயதொழில் வாழ்வாதார உதவித் திட்டங்களைக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட எம் மக்களை எவ்வாறு கரையேற்றுவதெனத் தெரியாது விழித்துக் கொண்டிருக்கும் இவ்வேளைகளில் ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள் அதாவது, வாள்வீச்சு, போதைப் பொருள் பாவனை, அளவுக்கு மிஞ்சிய மதுபானப் பாவனைகள் ஆகியவை எம் மக்களிடையே பரவி வருவது எமக்கு மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணுகின்றது. இந்தப் பிரதேசங்களில் அவை பரவியிருக்கின்றனவோ நான் அறியேன். ஆனால், போராட்ட காலங்களில் மிக அமைதியாகக் காணப்பட்ட வடபகுதி இன்று கேரளகஞ்சா வர்த்தகத்தின் வர்த்தக மையமாக உருவாகியிருப்பது எமக்குக் கவலையைத் தருகின்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற பொலிஸாருடனான சந்திப்பின் போது இந்த விவரம் கூறப்பட்டது. அவற்றைத் தடுத்து நிறுத்தப் பொலிஸார் ஊக்கம் காட்டி வருகின்றார்கள்.

வடபகுதியில் எம்மைச் சுற்றி சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவ வீரர்கள் கடமைபுரிய அதற்கு மேலதிகமாக கடற்படை, பொலிஸ், ஆகாயப்படை என மேலதிகப் படைகள் எம்மைச் சுற்றி வலம் வருகின்றன. கடலோரப் பாதுகாப்புகள் மிகவும் இறுக்கப்பட்டுள்ள நிலையில் கடல் வழியாகக் கஞ்சாப் பொதிகள் இலங்கைக்கு அதாவது வட பகுதிக்கு எடுத்து வரப்படுகின்றது எனின் இதன் பின்புலம் மற்றும் தாற்பரியங்களை ஓரளவு யூகித்துக் கொள்ளலாம்.

இத்தனை காவல்களையும் தாண்டிப் போதைப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றதெனில் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளில் எங்கோ ஓட்டைகள் காணப்படுகின்றன என்பது புலனாகின்றது. வேலியே பயிரை மேய்ந்து வருகின்றதோ எனச் சந்தேகம் கூட எழுகின்றது.

அதைவிட போரில் ஈடுபட்ட படையினர் வடமாகாணத்தில் பல ஏக்கர் காணிகளில் தொடர்ந்திருந்து வருவது மக்களின் சுமூகமான சுதந்திரமான வாழ்வுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. முக்கியமாகப் பெண்களையே அது பாதிக்கின்றது. எனவே, படிப்படியாக வடமாகாணத்தில் இருந்து படையினரை வாபஸ் பெற வேண்டும் என்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

எமது வனப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூட்டான் நாட்டில் அதன் 72 சதவிகிதம் காணி காடாக, வனமாக, பச்சைப் பசேலென்று இருக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தை அந்த ஊர் அரசர் கொண்டு வந்துள்ளார். மரங்களை, காடுகளை அழிப்பதால் சீதோஷ்ண நிலை பாதிக்கப்படுகின்றது. வன ஜந்துக்கள் அழிந்து போகின்றன. செடி வகை கள், மரவகைகள் அழிக்கப்படு கின்றன. மக்களின் இயல்பு நிலைக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று கண்டு அந்நாட்டு மன்னர் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். வனங்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். எங்கள் பிராந்தியங்களில் கள்ள மரம் கடத்தல் போன்றவற்றை நாங்கள் தடுத்து நிறுத்தவேண்டும். வன மிருகங்களைக் கொன்று குவிப்பதை நாம் தடுக்க வேண்டும். இவை பற்றிய தகவல்கள் கிடைத்தால் எமது அலுவலகத்துக்கு அறிவிக்கத் தவறாதீர்கள். எமது செயலாளரிடம் இருந்து தொலைபேசி விவரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வடபகுதியில் தமிழர்களுக்குரிய அடையாளங்கள், தெற்கில் உள்ள கடும் போக்காளர்களாலும் மற்றையோராலும் மறுக்கப்பட்டு வரும் இத்தருணத்தில் அநுராதபுரம் இராச்சியம் அமைந்துள்ள பகுதியில் 12ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அமைந்திருந்த ஒருசிவன் ஆலயம் உருக்குலைவின்றி மண்ணுக்கடியில் கண்டு பிடிக்கப் பட்டிருப்பது தமிழ் பேசும் இந்துக்களின் இருப்பிடம் எங்கு வரையெல்லாம் வியாபித் திருந்தது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது.

சரித்திரங்கள் மாற்றப்படலாம். வரலாறுகள் புனையப்படலாம். ஆனால் அடையாளச் சின்னங்கள் அழிக்கப்படமுடியாதவை. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அடையாளங்கள் 21ஆம் நூற்றாண்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது போன்று எமது நீண்ட வரலாறு காலம் கடந்தும் இம்மண்ணில் பேசப்படும் என்பதைக் கடும் போக்காளர்கள் தெரிந்து வைத்திருப்பது நல்லது. வடமாகாணத்தில் கருங்கற் பாவனை குறைவாக இருந்ததால் கல்வெட்டுக்கள் போன்ற நீண்டகால அடையாளச் சின்னங்கள் அல்லது நடந்தவற்றை நிரந்தரமாகப் பொறித்து வைக்க உதவும் பொருள்கள் குறைவாகவே எமது பாரம்பரியத்தை விளக்கி வந்துள்ளன. அதனால் எமது பாரம்பரியம் அண்மைய காலத்தினதே என்று கூறுவது தவறானது. போகப் போக எமது சரித்திரம் வெளிக் கொண்டு வரப்படும்.

ஆனால் மக்களின் உரித்துக்கள் யார் முதலில் வந்தார்கள் என்பதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அப்படியானால் அமெரிக்கா செவ்விந்தியருக்கே உரித்தாகவேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்கள் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைமுறையைத் தொடர்ந்து பலகாலமாகப் பின்பற்றி வந்திருந்தால் அவரகளுக்கென சில சட்டரீதியான உரித்துக்கள் இருக்கின்றன என்பதைச் சர்வதேசச் சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. ஆகவேதான் நாங்கள் எங்கள் பிராந்தியத்துக்குச் சில தனித்துவமான உரித்துக்களைக் கேட்டு நிற்கின்றோம். சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பைக் கேட்டு நிற்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட வயதை எமது பிள்ளைகள் எய்திவிட்டால் அவர்கள் தம்மைத் தாமே பார்த்துக் கொள்ள, பரிபாலனம் செய்ய, பாதுகாத்துக் கொள்ள இடமளிக்க வேண்டும். அது போன்றதே அரசியல் சிந்தனைகளும். அவரவர்களின் தனித்துவத்தைப் பேண அந்தந்தப் பிராந்திய மக்களுக்கு இடமளிக்கவேண்டும். இதனையே நாங்கள் வலியுறுத்திவருகின்றோம். இது சிங்கள மக்களையும் சாரும். எம்மையும் சாரும். எமது பாரம்பரியங்களைப் பாதுகாத்து எம்மை நாமே பரிபாலித்து வர எமது அரசியல் யாப்பு இடமளிக்க வேண்டும்.

எனவே எமது கொள்கைகளில் நின்று எந்தவித மாற்றமும் இன்றி எமது இருப்புக்களை உறுதிசெய்வதற்கும் எமது மக்களின் அமைதியான வாழ்க்கை முறைமைக்கு ஏற்ற சூழல்களை ஏற்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றோம்.

# தனியார் பேருந்து உரிமையாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு

## அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையில்

வடக்கு மாகாணத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் நீண்ட நாள்களாக எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கோடு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

வடக்கு போக்குவரத்து அமைச்சின் மன்னார் உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் அ. நிக்கொலஸ்பிள்ளை, வட இலங்கை தனியார் பேருந்துச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர், ஐந்து மாவட்டங்களினதும் தனி யார் பேருந்து உரிமையாளர்களது சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அந்தக் கலந்துரையாடலில், வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பிரச்சினைகள் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் தத்தமது பிரச்சினைகளை அமைச்சருக்குக் கூறினர்.

இதன்போது, பல உரிமையாளர்கள் தமது அனுமதிப் பத்திரங்களை சட்டவிரோதமாக நீண்ட காலப் பயன்பாட்டுக்காக வேறு நபர்களுக்குக் கொடுத்திருந்தமையும், பலர் வழி அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்திருந்தமையும் தெரியவந்துள்ளது.

இவர்களின் பிணக்குகள் உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டு முறைகேடு செய்தவர்களின் வழி அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், புதுப்பிக்கப்படவேண்டியிருந்த பல அனுமதிப் பத்திரங்கள் அன்றைய தினமே புதுப்பித்துக் கொடுக்கப்பட்டன. (ம-70)

# வடக்கின் கடற்றொழில் தொடர்பாக நேற்று மன்னாரில் ஆராய்வு

மன்னார் நவ. 11

வடக்கில் கடற்றொழில் அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவச் செயற்பாடு ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாணக் கடற்றொழில் அமைச்சின் மன்னாரிலுள்ள உப அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் (நட்சோ) வடக்கு,கிழக்கு மாகாண இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன், மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிக்ட் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகைகள், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் மற்றும் தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய வருகைகள் என் பன தொடர்பாக ஆராயப்பட்டன.

(ம-81)

# படை வாகனங்களின் வர்ணத்துக்கு மோ.சைக்கிளை மாற்றியவர் கைது!



மோட்டார் சைக்கிளின் உண்மையான வர்ணத்தை மறைத்து படையினரின் வாகனங்களுக்குப் பயன்படுத்தும் வர்ணத்தைப் பூசியவருக்கு எதிராக வவுனியாவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுக்குப் படையினரின் வாகனங்களுக்குப் பயன்படுத்தும் வர்ணத்தைப் பூசி அதனைப் பயன்படுத்தி வந்துள்ளார்.

இந்த இளைஞர் நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியா நகரப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவரை மறித்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அந்த மோட்டார் சைக்கிளைப் பறிமுதல் செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

வாகனத்தின் உண்மையான வர்ணத்தை மறைத்தமை தொடர்பில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ம-100)

# இராட்சத முள்ளங்கி



மஸ்கெலியா - பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் வசிக்கும் முத்துசாமி சிவனு என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் புதுமையான இராட்சத முள்ளங்கி ஒன்று விளைந்துள்ளது.

விற்பனைக்காக முள்ளங்கி விதையை விதைத்து சுமார் மூன்று மாதங்களுக்கு பின் அறுவடை செய்தபோது இந்த இராட்சத முள்ளங்கி விளைந்து காணப்பட்டுள்ளது. குறித்த முள்ளங்கி 3 கிலோ 800 கிராம் நிறையுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 13 இலட்சத்து 28 ஆயிரம் லீற்றர் மதுபானம் குடித்துள்ள வவுனியா!

## 10 மாதங்களில் 'பெருங்குடிமக்கள்' சாதனை!

வவுனியா, நவ.11

வவுனியா மாவட்டத்தில் கடந்த 10 மாதங்களில் 13 லட்சத்து 28 ஆயிரத்து 505 லீற்றர் மதுபான வகைகள் விற்பனையாகியுள்ளன என்று மாவட்ட மதுவரித் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப் பகுதியில் 13 லட்சத்து 28 ஆயிரத்து 505 லீற்றர் மதுபான வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அதன்படி பியர் வகைகள் 6 லட்சத்து 67 ஆயிரத்து 34 லீற்றரும், உள்நாட்டு சாராய வகைகள்6 லட்சத்து 42 ஆயிரத்து 125 லீற்றரும், பிஸ்கி வகைகள் 3 ஆயிரத்து 761 லீற்றரும், பிறண்டி வகைகள் 9ஆயிரத்து 689 லீற்றரும், ஜின் வகைகள் 3ஆயிரத்து 42 லீற்றரும், ரம் வகைகள் ஆயிரத்து 143 லீற்றரும், வொட்கா வகைகள் 827 லீற்றரும், வைன் வகைகள் 884 லீற்றரும் விற்பனையாகியுள்ளன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பியர் வகைகளே அதிகமாக விற்பனையாகியுள்ளன.

வவுனியாவில் ஒரு இலட்சத்து 71 ஆயிரம் மக்கள் வாழும் நிலையில் மதுபான விற்பனை இவ்வாறு அதிகரித்துக் காணப்படுகிறது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ-100)

# சிறுபான்மை மக்களது உரிமைகளை நல்லாட்சி அரசு பாதுகாக்க வேண்டும்

## இதற்கு காத்திரமான நடவடிக்கை அவசியம் என்கிறார் ஹிஸ்புல்லா

கொழும்பு, நவ.11

நாட்டில் மீண்டும் தலை தூக்கியுள்ள இனவாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் காத்திரமான நடவடிக்கை அவசியம். அதேவேளை, சிறுபான்மை மக்களது ஆதரவுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள நல்லாட்சி அரசு சிறுபான்மை மக்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலேயே செயற்பட வேண்டும். இனவாத பேச்சுக்களுக்கு அது ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பமான நிலை தொடர்பில் சிறுபான்மை மக்கள் அச்சமடைந்துள்ளனர். நல்லாட்சி அரசை உருவாக்கக் காரணமாக இருந்த சிறுபான்மை மக்கள் தங்களது மத, அரசியல் உரிமைகள் நல்லாட்சியில் பாதுகாக்கப்படும் என நம்பியிருந்தனர். ஆனால், அண்மைக் காலமாக நடந்தேறும் சில சம்பவங்களால் நல்லாட்சி அரசு மீது சிறுபான்மை மக்கள் வைத்திருந்த நம்பிக்கை குறைந்துள்ளது.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது பல தரப்பினரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோர் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அமைச்சரவையில் எடுத்துரைத்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் மனோகணேசன் ஆகியோர் தனிப்பட்ட ரீதியிலும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன்போது, சிறுபான்மை மக்கள் மாத்திரம் வாழும் இறக்காமம், மாணிக்கமடு பிரதேசத்தில் பலவந்தமாக வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளன.

வெறுப்புணர்வை தூண்டும் பேச்சுக்கள், இனவாத கருத்துக்கள் பரப்புவதைத் தடுப்பதற்கான சட்டங்கள் கொண்டுவரப்படும் என நல்லாட்சி அரசு தேர்தல் காலங்களில் குறிப்பிட்டது. இதனை காலம் தாமதிக்காது அமுல்படுத்த வேண்டும். - என்றார். (ஐ)

# டக்ளஸின் பிறந்த நாளான நேற்று இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.11

இரத்ததானத்தின் மகத்துவத்தை முன்னிறுத்தி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தாவின் 59ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று இரத்ததான முகாம் நடைபெற்றது.

ஒவ்வொரு வருடமும் டக்ளஸின் பிறந்த நாளான நவம்பர் மாதம் 10ஆம் திகதி கட்சியின் ஆதரவாளர்கள் இரத்ததானம் செய்வது வழக்கம். நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் காலை முதல் மாலை வரை இரத்ததானம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி, பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானந்த ராஜா மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்னம், யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர் கா.வேலும்மயிலும், உதவி நிர்வாக செயலாளர் சி.பாலகிருஷ்ணன், சுவிற்சர்லாந்து பிராந்திய முக்கியஸ்தர் திலக் உள்ளிட்டோர் சிறப்பு அதிகளாக கலந்துகொண்டனர்.

# கடமைகளை ஊக்குவித்து பொலிஸாருக்குப் பரிசில்

கிளிநொச்சி, நவ.11

கிளிநொச்சிப் பொலிஸாரின் கடமைகளை ஊக்குவித்து பரிசு வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்தநிகழ்வில், கிளிநொச்சி பொலிஸ் பிரிவில், மிகவும் சிறப்பாக செயற்பட்ட, சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்த 50 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டபொலிஸ் உத்தியோகத் தர்களில் மிகவும் சிறப்பாகசெயற்பட்டுமுதல்நிலையில் உள்ள தர்மபுரம் பொலிஸ் நிலையைப்பொறுப்பதிகாரிடி.எம். சத்துரங்கவுக்கு பணத் தொகை பரிசாக வழங்கப்பட்டது என்று கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மாஅதிபர்மகேஷ்வெலிகன்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த சிறிவர்த்தன, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ஷ,தலைமைப் பொலிஸ் அதிகாரி ஜெசாந்த டி சில்வா, கரைச்சிப் பிரதேச செயலாளர் நாகேஸ்வரன், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்படப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)



ஜீ.ஜி.பொன்னம்பலத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு நேற்று முன்தினம் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மலர்மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர். (ஐ-10)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600


## ட்ரம்பின் வெற்றியை அடுத்து.....!

பல ஊகங்கள், தேர்தல் கருத்துக் கணிப்புகள் போன்றவற்றை எல்லாம் முறியடித்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அதிரடி வெற்றியை ஈட்டியிருக்கின்றார் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப்.

ஒட்டுமொத்தமாக வாக்களித்த அமெரிக்க மக்களில் ட்ரம்பை விட கூடுதலானோரின் வாக்குகளை ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன் பெற்றாராயினும், அமெரிக்கத் தேர்தல் முறைமையின் கீழ் அதிக தேர்தல் தொகுதிகளை வென்றதன் மூலம் அதிபர் பதவிக் கதிரையை எட்டிப் பிடித்துவிட்டார் ட்ரம்ப்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டொனால்ட் ட்ரம்புக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டமை போன்று, ட்ரம்பின் வெற்றியை அடுத்து இனி சர்வதேச அரசியலில், புதிய உலக ஒழுங்கு ஒன்று கட்டவிழும் என்பது உறுதி. சர்வதேச அரசியல் உறவுகளிலும் எண்ணிப் பார்க்க முடியாத மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உண்டு. அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் தோற்றியிருக்கின்றன என்றே தெரிகின்றது. இனி, சர்வதேச உறவுகளில் ஏற்படப்போகின்ற மாற்றங்கள் பற்றி ஆராய்வது இப்பத்தியின் இன்றைய நோக்கமல்ல. அது தனித்தும், விரிவாகவும், பிறிதொரு சமயத்திலும் பார்க்கப்பட வேண்டிய அம்சம்.

அமெரிக்க ஆட்சி அதிகாரத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம் - ஜனநாயகக் கட்சியிடமிருந்து குடியரசுக் கட்சிப் பக்கம் அதிகார லாகன் மாறியிருக்கும் இந்த நிகழ்வு - இலங்கை விடயத்தில் எத்தகைய தாக்க நிலை மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதுதான் எமது சிந்தனைக்குரிய விடயமாக அமைகின்றது.

டொனால்ட் ட்ரம்ப் வெறுமனே அமெரிக்காவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றியிருக்கின்றார் என்பதுடன் விடயம் முடிவடைந்து விடவில்லை.

அமெரிக்காவின் சட்டவாக்கத்துறையில் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவை இரண்டு சபைகள். ஒன்று செனட் சபை. மற்றது மக்கள் பிரதிநிதிகள் சபை. இந்த இரண்டும் சேர்ந்துமே அமெரிக்க காங்கிரஸ். அமெரிக்க காங்கிரஸில் , இந்த இரண்டிலும், ஒபாமா - ஹிலாரி தரப்பின் ஜனநாயகக் கட்சியை மேவி, அதிக - பலமான- உயர்ந்த- இடத்தை ட்ரம்பின் குடியரசுக் கட்சி இத்தேர்தலுடன் ஈட்டிக் கொண்டுள்ளது.

அதாவது, நிறைவேற்று அதிகாரத்துடன், சட்டவாக்க அதிகாரத்தையும் முழு அளவில் தக்க வைத்துக் கொண்டு மிகப் பலமான நிலையில் உலகின் அதி உச்ச அதிகாரப் பதவிக்கு வருகின்றார் ட்ரம்ப்.

ட்ரம்ப் ஒரு பாரம்பரிய அரசியல்வாதி அல்லர். திடீரென அரசியலுக்குள் விஞ்சியவராகி, ஜனாதிபதி பதவி வரை உயர்ந்து நிற்கின்றார்.

தேர்தல் பிரசார வேளையில் அமெரிக்க உள்நாட்டு அரசியல் தொடர்பில் தமது கொள்கை நிலைப்பாடுகள் குறித்தும், சர்வதேச உறவு அம்சங்களில் தமது உத்தேசப் போக்குப் பற்றியும் அவ்வப்போது அவர் வெளியிட்ட கருத்துக்கள் பலத்த சர்ச்சைகளையும் அதிர்ச்சிகளையும் ஏற்படுத்துவனவாக இருந்து வந்தன என்பது தெரிந்ததே.

அத்தகைய ஒருவர், முழு சட்டவாக்கல் வல்லமை அதிகாரத்திற்கான ஆதரவுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு - அதுவும் உலகின் ஒப்புயர்வற்ற அமெரிக்க வல்லரசின் தலைமைப் பதவிக்கு - வந்துள்ள நிலையில் அப்பதவியை ஏற்றதும் எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பார் என்பதை முன்கூட்டியே உய்த்துணர்ந்து கூறுவது இயலாத காரியமாகும்.

தமது புதிய அரசில், பாதுகாப்புச் செயலாளர், வெளிவிவகாரச் செயலாளர் மற்றும் சி.ஐ.ஏ, எவ்.பி.ஐ. போன்றவற்றின் இயக்குநர்கள், தேசிய பதுகாப்பு ஆலோசகர்கள் முதலிய பதவிகளுக்கு அவர் யார் யாரை நியமிக்கப்போகின்றார் என்பதிலும் இலங்கை போன்ற நாடுகளுடன் அமெரிக்காவின் எதிர்கால உறவுநிலை தங்கியிருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாதது.

அதேசமயம், இலங்கையைப் பொறுத்தவரை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதலைமையிலான ஐ.தே.கட்சி எப்போதுமே அமெரிக்கக் குடியரசுக் கட்சியுடன் நெருக்கமான - இணக்கமான - உறவு நிலையைப் பேணி வருகின்றது என்பதும் இந்த விடயத்தில் கவனிக்கத்தக்க அம்சமாகும்.

குடியரசுக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதியான ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினால் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச ஜனநாயக யூனியன் என்ற கட்டமைப்பிலும் சர்வதேச கொன்சவேட்டிவ் அரசியல் கட்சிகளின் குழுமத்திலும் ஐ.தே.கட்சி அங்கம் வகிக்கின்றது.

அந்த வகையில் அமெரிக்கக் குடியரசுக் கட்சியுடன் நெருக்கமான நிலைப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சி கொண்டிருக்கின்றது.

இலங்கையில் பிரதமர் ரணிலின் அரசு மலர்ந்த கையோடே குடியரசுக் கட்சியின் மூத்த பிரமுகர்களுள் ஒருவரான ரிச்சர்ட் ஆர்மிடேஜ் கொழும்பு வந்து பிரதமர் ரணிலுடன் மந்திராலோசனை நடத்தியமையையும் மறந்துவிட முடியாது.

எது எப்படியென்றாலும், போர்க் காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து நீதி, நியாயமான விசாரணைகளை நடத்துதல், பொறுப்புக் கூறல் ஆகிய விடயங்களில் சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவின் அழுத்தத்தை எதிர்கொண்டு வந்த இலங்கைக்கு, அமெரிக்க அதிபர் மாற்றம் ஓர் ஆறுதலாக - அபயமளிக்கும் வாய்ப்பாக - அமையும் என்று தென்னிலங்கைத் தரப்பில் முன்வைக்கப்படும் கருத்து இப்போதைய நிலையில் புறமொதுக்கத் தக்கதல்ல.

# இந்த வருடத்தில் மிகவும் குறைந்த மழைவீழ்ச்சியே!

## யாழ். வளிமண்டலவியல் அதிகாரி தகவல்

நல்லூர், நவ.11

கடந்த வருடத்தை விடவும் இந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவாக இருக்கும் என்று யாழ். வளிமண்டலவியல்திணைக்கள அதிகாரி ம.பிரதீபன் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

சாதாரணமாக ஒரு வருடத்தில், பருவகால மழைவீழ்ச்சி அதிகமாக இருந்தால் அதை அடுத்து வரும் வருடத்தில் மழை குறைவானதாகவே இருக்கும். இது வழமை. இந்த எதிர்பார்ப்பு இந்த வருட மழைவீழ்ச்சியைக் கணக்கிடும் பொழுது சரியானதாக இருக்கிறது. இது வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

வடபகுதியில் இவ்வருடம் ஜனவரியில் இருந்து நேற்று வரை 485 மில்லிமீற்றர் மழை மட்டுமேகிடைத்துள்ளது. ஆனால், கடந்த 2015ஆம் ஆண்டுமழைவீழ்ச்சி 1838.9 மில்லி மீற்றராக இருந்தது.

இந்த வருடத்தில் ஒக்ரோபர் மாதம் வரை 485 மில்லிமீற்றர் மழை கிடைத்திருக்க கடந்த வருடம் ஜனவரியில் இருந்து ஒக்ரோபர் வரை 701.2 மில்லி மீற்றர் மழையே பெய்துள்ளது. (216.2மி.மீ குறைவு)

கடந்த வருடம் ஒக்ரோபரில் மட்டும் 254.7 மி.மீற்றர் மழை பெய்துள்ளது. ஆகவே இந்த வருட மழைவீழ்ச்சி கடந்த வருடத்திலும் பார்க்க மிகக் குறைவானதாகும்.

நாடளாவிய ரீதியில் இந்த மாதம் 12ஆம் திகதி வரை பெரும் மழை பெய்ய வாய்ப்பு இல்லை. ஆனால் வட, கிழக்கு மாகாண கடற்கரையோரங்களில் ஆங்காங்கே இடியுடன் கூடிய சிறிய அளவிலான மழை பெய்யலாம் - பெய்ய வாய்ப்பிருக்கிறது.

கடந்த நாள்களில் தென் இலங்கையில் மழை பெய்தமைக்கு வங்கக் கடலில் தோன்றிய புயல் தாக்கமே காரணம். இது வடக்கு நோக்கிநகர்ந்ததால் வடமாகாணத்துக்கு மழை கிடைக்கவில்லைஎன்றார் அவர்.(இ-20)

# லஞ்ச வழக்கில் பொலிஸ் அதிகாரி 19 வருடங்களின் பின் விடுதலை

கொழும்பு, நவ.11

கடந்த 19 வருடங்களாக லஞ்சக் குற்றச்சாட்டு வழக்கை எதிர்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கொழும்பு மேல் நீதிமன்றம் சில தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்திருந்தது.

லக்கல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய டபிள்யூ.ஏ.லலித் குமார என்பவரை விடுதலை செய்யும் தீர்ப்பையே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.வி.கருணாதிலக வழங்கினார்.

இராணுவப் பணியில் லீவில் இருந்த சமயம் மரங்கள் மற்றும் தளபாடங்களை உரிய அனுமதிப் பத்திரமின்றி லொறி ஒன்றில் இராணுவச் சீருடையுடன் ஏற்றிச் சென்றிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு இராணுவத்தினரையும், சிவிலியன் சாரதி ஒருவரையும் பிணையில் செல்லவும், கைப்பற்றப்பட்ட லொறி மற்றும் மரம் தளபாடங்கள் ஆகியவற்றை விடுவிக்கவும் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்காமல் இருப்பதற்காக மேற்படி பொலிஸ் அதிகாரி 1997 ஜனவரி 2ஆம் திகதி 10 ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கினார் என இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தது. (உ)

## கராம்பு இறக்குமதிக்குத் தடை

கொழும்பு, நவ.11

கராம்பு இறக்குமதிக்கு முழுத்தடை விதிக்கும் தீர்மானத்தை அரசு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைநுழைவு வர்த்தக அனுமதியின் கீழ் பிறநாடுகளில் உற்பத்தியாகும் கராம்பை இலங்கைக்குள் கொண்டு வரும் சிலர், அவற்றை இங்கு மீண்டும் பொதியிட்டு இலங்கை உற்பத்திக் கராம்பு போல காட்டி மீள் ஏற்றுமதி செய்கின்றனராம்.

இந்த நடவடிக்கையால் இலங்கையில் உற்பத்தியாகும் கராம்புக்கு மவுசு குறைவதோடு, உள்ளூர் கராம்பு உற்பத்தியும் பாதிக்கப்படுவதாக அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்தே கராம்பு இறக்குமதிக்கு முற்றாகத் தடை விதிக்க அரசு தீர்மானித்திருப்பதாகக் கூறப்பட்டது. (உ)

## காலிப் பிரதேசத்தில் அடைமழை; மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

கொழும்பு, நவ.11

தெற்கு காலியை அண்டிய கெடன்தொல பிரதேசத்தில் கடந்த நாள்களில் அதிக மழைவீழ்ச்சி பதியப்பட்டுள்ளது.

கெடன்தொல பிரதேசத்தில் 165.1 மில்லிமீற்றரும் பத்தேகம பிரதேசத்தில் 162.7 மில்லிமீற்றரும் தலங்கஹவத்த பகுதியில் 114.6மில்லிமீற்றர் அளவிலும் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், நாட்டின் பல பகுதிகளிலும் பெய்துவரும் அடைமழையானது தெற்கிலே அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அசாதாரண காலநிலையினால் பத்தேகம, ஜின்கங்கையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், பத்தேகம - நாகொட மற்றும் பத்தேகம - அதலிய ஏரிகள் நீரில் மூழ்கியுள்ளன. குறித்த பிரதேசங்களில் நிலவி வரும் அசாதாரண கால நிலையின் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. (இ-1)

## போதைப்பொருள் கடத்தலை தடுக்க கடற்படையினர் விசேட நடவடிக்கை

கொழும்பு,நவ.11

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மன்னார் மற்றும் வடக்கு கடல் பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மேலும், போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க அதிவேகப் படகுகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் அவர் கூறினார். (இ-1)

## சந்நிதி ஆசிரமத்தில் இன்னிசைக் கச்சேரி

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆசிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்க வாத்தியங்கள் சகிதம் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். இக்கச்சேரியை யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை மாணவன் சிவலிங்கேஸ்வரன் நிதர்ஸன் நிகழ்த்துவார்.

### நாளை

12.11.2016
சனிக்கிழமை
திதி : திரயோததசி பி.இ 12.57 வரை
நட்சத்திரம் : ரேவதி
மூ.இ. 8.42 வரை
சுபநேரம் 3.06 - 04.36
இராகுகாலம் 9.06 - 10.36

# விஷ ஊசி மருந்துப் பரிசோதனையில் ஆர்வம் காட்டாத முன்னாள் போராளிகள்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கூறுகிறது

வவுனியா, நவ.11

பத்தாவது வாரமாக நடைபெற்று வரும் விஷ ஊசி மருத்துவ பரிசோதனையில் 193 முன்னாள் போராளிகள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். மருத்துவ பரிசோதனையில் முன்னாள் போராளிகள் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

விஷ ஊசி விவகாரம் தொடர்பில் பத்தாவது வாரமாக நடைபெற்ற இந்த மருத்துவ பரி சோதனையில் இதுவரை 193 முன்னாள் போராளிகள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். மருத்துவ பரிசோதனையில் முன்னாள் போராளிகள் ஆர்வம் காட்டாத தன்மையையே இது வெளிப்படுத்துகிறது என்று வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விஷ ஊசி தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வடமாகாண வைத்தியசாலைகளில் மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகின்றது. அதன்படி பத்தாவது வாரமாக மருத்துவ பரிசோதனை கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதுவரை மேற்கொண்ட மருத்துவ பரிசோதனைகளில் யாழ் மாவட்டத்தில் 30 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 28 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 123 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும், மன்னார் மாவட்டத்தில் 5 பேருமாக 193 பேர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் செப்ரெம்பர் 2 ஆம் திகதி 26 பேரும், செப்ரெம்பர் 9 ஆம் திகதி 47 பேரும், செப்ரெம்பர் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் 22 பேரும், செப்ரெம்பர் 23 ஆம் திகதி 30 பேரும், செப்ரெம்பர் 30 ஆம் திகதி 21 பேரும், ஒக்ரோபர் 7ஆம் திகதி 15 பேரும், ஒக்ரோபர் 14 ஆம் திகதி 10 பேரும், ஒக்ரோபர் 21 ஆம் திகதி 14 பேரும், ஒக்ரோபர் 28 ஆம் திகதி 2 பேரும், இம்மாதம் 4 ஆம் திகதி 6 பேரும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, புனர்வாழ்வின் பின் விடுதலையாகி வவுனியா, புளியங்குளம் பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளியான எஸ்.அமலதாஸ் (வயது 46) என்பவர் கடந்த மூன்றாம் திகதி திடீரென மயக்கமுற்று விழுந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-100)

## கரணவாய் பகுதிக்கு குடிதண்ணீர்; தனி ஒருவரின் உதவியில் வழங்கல்

கரணவாய் பகுதி மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்காக அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரால் அவரது காணியில் உள்ள கிணறு, நீர்த்தாங்கி என்பன கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. கரணவாயைச் சேர்ந்த குட்டியன் மகாலிங்கம் என்பவரே தமது கிணறு, நீர்த்தாங்கி என்பவற்றை எவ்வித கட்டணங்களும் இன்றி 20வருடங்களுக்கு வழங்கியுள்ளார்.

கரணவாய்,கரணவாய் கிழக்கு பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்று வரவேண்டிய நிலையில் இவரால் வழங்கப்பட்டுள்ள நீர்த்தாங்கி மூலம் அப் பகுதி மக்கள் பயனடைந்து வருகின்றனர் என்று கூறப்பட்டது. (ஜ - 40)

## தூர்ந்த கிணறுகளை புனரமைக்க நடவடிக்கை

வலி.மேற்கு,நவ.11

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தூர்ந்துபோன விவசாய கிணறுகளை புனரமைப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பதினைந்து விவசாயக் கிணறுகளை புனரமைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்து இவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் புனரமைப்பு வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் வலி மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-53)

# ஈழத்தமிழர் வாழ்வியல் சோகம் நாடகங்களாக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,நவ.11

கலாமன்றத்தின் சிறப்பு ஆற்றுகைகளான ஈழத்தமிழரின் சமகால வாழ்வியல் சோகத்தை சொல்லவிளையும் படைப்புக்களான வார்த்தைகளற்ற நாடகமும், அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகமும் நாளை மறுதினம் கொழும்பில் அரங்கேற்றப்படவுள்ளன.

கெயார் சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும், 13 ஆம் திகதியும் கொழும்பில் நம்பிக்கையின் சிறகசைப்பு விங்ஸ் கலைப் பெருவிழா இடம் பெறவுள்ளது.

நிறைவு நாளான 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு - 7 இல் அமைந்துள்ள லயனல் வெண்ட் அரங்கில் பிற்பகல் 3.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் இந்த நாடகங்கள் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளன.

வார்த்தைகளற்ற நாடகம் பெருவெடிப்பிலிருந்து உலகம் உருவானது முதல் மனிதகுல உருவாக்கம், பரிணாம வளர்ச்சி, இன்றைய தொழில்நுட்ப, இலத்திரனியல் உலகுவரையான வளர்ச்சிகளின் பரிமாணங்களை விஞ்ஞானபூர்வமாக அணுகி அதில் மனிதத்தைத்தேடும் மாபெரும் படைப்பாக திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் சிங்களக் கலைஞர்களின் இணைந்த தயாரிப்பில் அரங்கேறவுள்ளது.

அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகம் சங்கப்பாடல்களில் குறிப்பிடப்படும் பறம்பு தேசத்தை ஆண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய வேள்பாரி மன்னனின் வீரவரலாற்றையும் சேரசோழப் பேரரசுகளின் கூட்டுச்சதியால் சிதைக்கப்பட்ட பறம்பு தேசத்தின் சோக வரலாற்றையும் உள்ளடக்கி இந்த ஆற்றுகை இடம்பெறவுள்ளது.

அகதிகளாகி அந்தரித்து நிற்கும் பாரியின் மக்களான அங்கவை சங்கவை மற்றும் புலவர் கபிலர் போன்ற பாத்திரங்களால் ஈழத் தமிழரின் சமகால வாழ்வியல் சோகத்தை சொல்ல விழையும் படைப்பாகவும் 20 இற்கும் மேற்பட்ட அரங்குகளைக் கண்ட, ஈழத்தின் பல்வேறு பிரதேசக்கூத்து மரபுகளை ஒன்றிணைத்து ஆக்கப்பட்ட ஒயிலாக்க நாடகமாகவும் அமைகின்றது.

இந் நாடகங்களை பார்வையிடுவதற்கான அனுமதி முற்றிலும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

## பரிசளிப்பு விழா

கரவெட்டி திரு இருதயக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவருமான வேலாயுதம் கணேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் அமல்ராஜ் அடிகள் பங்குபற்றுவார். (இ-30)

## பண்ணிசை,பேச்சு போட்டிகள் நாளை

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தால் மாணவர்களிடையே நடத்தப்படும் பண்ணிசை, பேச்சு ஆகிய போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறும். (இ - 7)

# மருதங்கேணிப் பிரதேசத்தில் 32 வீடுகள்; நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பமாகின

மருதங்கேணி, நவ.11

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டு மேலும் 32 வீடுகள் கட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது.

மீள் குடியேற்ற அமைச்சினால் இப்பிரதேசத்துக்கென இவ்வாண்டு 312 வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. அவை கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இரண்டாம்கட்டமாக 32 வீடுகள் கொண்ட வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. பிரதேசத்தில் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கவென மேலும் 200 வீடுகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலர் கே.கனகேஸ்வரன் விடுத்த கோரிக்கையை மீள் குடியேற்ற அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை மீள் குடியேற்ற அமைச்சு விரைவில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-30)

## முன்பள்ளி கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

புலோலி, நவ.11


புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் முகாமைத்துவ குழுச் செயலாளர் மு. ஜெகதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.கமலாம்பாள் பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகவும் கிராம அலுவலர் திருமதி விமல்சினி நிமல்ராஜ், பொருளாதார உத்தியோகத்தர் திருமதி சுயாந்தினி சேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ-7)

# சங்கிலியன் பூங்கா மலர்க் கண்காட்சி இன்று நிறைவடைகிறது...







வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான மலர்க் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகிறது.

வடமாகாண சுற்றாடல் அமைச்சால் தாவர உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்களின் பங்கேற்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கண்காட்சியை தினமும் ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டு வருகின்றனர். அவர்கள் மரக்கன்றுகளையும் பூச்செடிகளையும் வாங்கிச் செல்கின்றனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் பயன்தரு மரக்கன்றுகளும் நிழல் மரக்கன்றுகளும் பூச்செடிகளும் விற்பனையாகி வருகின்றன என்று மலர்க் கண்காட்சியில் பங்கேற்றுள்ள பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ)

# டிரம்ப் வெற்றிக்கு 5 காரணங்கள்!

வொஷிங்டன்,நவ.11

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் கணிப்புக்களையும் மீறி, வெற்றிக்கனியைப் பறித்திருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப். அதற்கான முக்கிய காரணங்களான ஐந்து விடயங்களை பி.பி.சி வெளியிட்டிருக்கின்றது.

**ட்ரம்பின் வெள்ளை அலை**

முடிவுகள் தலைகீழாக மாறின. ஒஹியோ, ஃபுளோரிடா, வட கரோலினா ஆகிய அனைத்தும் ட்ரம்புக்கு ஆதரவாக மாறின. அதுதான், ஹிலாரி கிளிண்டனின் பாதுகாப்பு அரணைத் தகர்த்தெறிந்தது.

மத்திய மேற்கு பிராந்தியம் ஹிலாரிக்கு பெருமளவில் கை கொடுக்கும் என்று நம்பினார்கள். பல பதிற்றாண்டுகளாக அந்தப் பிராந்தியம், ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாகவே இருந்தது. கறுப்பினத்தவர் மற்றும் வெள்ளையின உழைக்கும் வர்க்கம் அவர்கள் பக்கம் இருந்தது.

அந்த வெள்ளையின உழைக்கும் வர்க்கம், குறிப்பாக கல்லூரிப் படிப்பு இல்லாத ஆண்களும் பெண்களும், இந்த முறை ஜனநாயகக் கட்சியைக் கைவிட்டார்கள். கிராம மக்கள் பெருமளவில் திரண்டு வாக்களித்தார்கள். கடலோரப் பகுதியில் உள்ள செல்வந்தர்கள் மற்றும் ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டோம் என அவர்கள் அதிருப்தியடைந்திருந்தார்கள். இப்போது தங்கள் குரலை ஒலிக்கச் செய்திருக்கிறார்கள்.

விர்ஜினியா,கொலராடோ மாகாணங்கள் விரைவில் விழுந்த நிலையில், விஸ்கான் சினும் ட்ரம்புக்கு ஆதரவாக வீழ்ந்த போது, ஹிலாரியின் நம்பிக்கை தகர்ந்தது. டிரம்ப் அலை மிகவேகமாக தாக்கியிருக்கிறது.

(19 ஆம் பக்கம் பார்க்க)


## அமெ.தேர்தல் பிரதிபலிப்பு; சர்வதேசத்தின் 'கார்ட்டூன்கள்!'












## மைத்திரியின் உத்தியே ஹிலாரியினதும்; அது இங்கு வென்றது; அங்கு தோற்றது!

கொழும்பு, நவ.11

இலங்கையில் 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன பயன்படுத்திய உத்தியை இம்முறை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனும் பயன்படுத்தினார்.

ஆனால், மைத்திரி வென்றார்; ஹிலாரி தோற்றுப்போனார்.

ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலக்க இவ்வாறு ஒப்பீடு செய்திருக்கின்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக வானொலி ஒன்றில் வழங்கிய கருத்துப் பகிர்வின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறுபான்மையினரின் ஒட்டு மொத்த ஆதரவையும், பெரும்பான்மைச் சிங்களவரில் கணிசமானோரின் ஆதரவையும் திரட்டி வெற்றி பெறும் உத்தியையே கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தரப்பு பயன்படுத்தியது.

அதே உத்தியை தான் ஹிலாரியும் பயன்படுத்த எத்தனித்தார். அமெரிக்காவின் கறுப்பின மக்கள், பிற சிறுபான்மை இனத்தவர்களின் ஒட்டு மொத்த ஆதரவையும், பெரும்பான்மை இனத்தவரான வெள்ளையர்களின் கணிசமானோரினது ஆதரவையும் பெறுவதன் மூலம் இந்தத் தேர்தலில் வெல்லலாம் என்று கணித்து அந்த உத்தியை நாடியவர் ஹிலாரி.

தேர்தலுக்கு முந்திய கணிப்புகள்கூட, ஒட்டுமொத்த சிறுபான்மையினரும் ஹிலாரி கிளிண்டனுக்கும், பெரும்பான்மை வெள்ளையர்கள் - குறிப்பாக அவர்களுள் ஆண்கள் - ட்ரம்புக்கும் ஆதரவான நிலையில் இருந்தனர் என்றே தெரிவித்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மையினரை இணைத்துக் கொண்டு வெற்றி பெறலாம் என்ற எதிர்பார்ப்பு அமெரிக்காவில் தோல்வியடைந் துள்ளது. சந்திரிகா பயன்படுத்தி வருவதும் ஹிலாரியின் அணுகுமுறையையே ஆகும் எனவும் ஜயதிலக்க மேலும் கூறினார்.(உ)

## அமெரிக்க காங்கிரஸிலும் ட்ரம்ப் முழுப் பலத்துடன்!

அமெரிக்காவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப்,அமெரிக்க சட்டவாக்க சபைகளிலும் கணிசமான பலத்தைப் பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டவாக்கல் சபையான அமெரிக்க காங்கிரஸ் இரண்டு சபைகளைக் கொண்டது. ஒன்று செனட் சபை அல்லது மூதவை. மற்றது மக்கள் பிரதிநிதிகள் சபை.

செனட்சபையில் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்கு 51 செனட்டர்கள் உள்ளனர். எதிரணியில் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சிக்கு 46 செனட்டர்கள் உள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் ட்ரம்பின் குடியரசுக் கட்சி தெளிவான பெரும்பான்மை கொண்டுள்ளது. அந்த சபையில் 239 உறுப் பினர்கள் உள்ளனர். ஆனால் ஜனநாயகக் கட்சிக்கு அங்கு 193 உறுப்பினர்களே உள்ளனர்.

எனவே ட்ரம்ப் அமெரிக்காவை நிர்வகிப்பதற்கு நிறைவேற்று அதிகாரத்துடன் சட்டவாக்கல் அதிகாரத்தையும் கொண்டவராக முழுப்பலத்துடன் பதவிக்கு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்குத் தமிழருக்கு ஏமாற்றம்! இலங்கை அரசுக்கு உற்சாகம்!!

வடக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்பில் –நம்பிக்கையில்– ட்ரம்பின் வெற்றியால் இடி வீழ்ந்தது.

இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இலங்கையின் உறவில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அர சியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இவரது பெரும்பாலான நடவடிக்கை இலங்கைக்குச் சிறந்ததாக அமையும். ட்ரம்புக்கு எதிராக போட்டியிட்ட ஹிலாரிக்கு, புலம்பெயர் தமிழர்கள் அதீத ஆதரவை வழங்கினர். இந்த வகையில், ஹிலாரி ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தால் அது இலங்கைக்குப் பெரும் பாதிப்பாக அமைந்திருக்கும். ட்ரம்பின் வெற்றியால் வடக்குத் தமிழர்களின் பெரும் எதிர்பார்ப்பு வீண்போயுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## இஸ்லாமிய பயங்கரவாதத்தை ட்ரம்ப் தோற்கடிப்பாரா?

கொழும்பு, நவ.11


முஸ்லிம்களுக்கு எதிராக தீவிர இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் பொதுப லசேன அமைப்பு, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியிருக்கும் டொனால்ட் ட்ரம்புக்குத் தான்அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலும் இஸ்லாமிய எதிர்ப்புப் பாணியைக் கைவிடவில்லை.

புதிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ட் இஸ்லாமிய தீவிரவாதத்தை முற்றாகத் தோற்கடிப்பார் என நாம் நம்புகின்றோம்.

இதன் போது இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு எதிராக ரஷ்யா தீர்க்கமான யுத்தம் ஒன்றை முன்னெடுக்கின்றது. ஆனால், தற்போதைய அமெரிக்க நிர்வாகம் அதில் முழுப்பங்களிப்பு டன் ஈடுபடவில்லை. அமெரிக்காவின் புதிய அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இந்த நிலைமை மாறும் என நம்புகின்றோம். இவ்வாறு பொது பலசேன தனது வாழ்த்தில் தெரிவித்துள்ளது. (உ)

# தேர்தல் சீட்டாட்டம்: இந்த 'ட்ரம்ப்' வெற்றிவாகை!






















# கண்காணிப்பில் இலங்கையர்கள்

## பயங்கரவாதம் குறித்து ஐ.ஜி.பி.



கொழும்பு நவ.11

இலங்கையிலிருந்து, பயங்கரவாதம் முற்றாக துடைத்தெறியப்பட்டுள்ள நிலையில், சர்வதேச நாடுகளில் இயங்கும் பயங்கரவாத அமைப்புகளுடன், இலங்கையர்கள் தொடர்புபட்டுள்ளார்களா என்பது தொடர்பில், தொடர்ந்தும் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர தெரிவித்தார்.

மேலும், சர்வதேச பயங்கரவாதத்துடன் இணைந்திருந்த இலங்கையர் ஒருவர், 2015 ஆம் ஆண்டில், சிரியாவில் வைத்து கொல்லப்பட்டுள்ளார் என்றும், அவர் நினைவுபடுத்தினார்.

இந்தோனேஷியாவின் பாலி பிரதேசத்தில் நடைபெற்று வரும், சர்வதேச பொலிஸாரின் 85 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாடு, நேற்றுடன் முடிவடைந்தது. சர்வதேச நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சுமார் ஆயிரத்து 200 பொலிஸ் உயரதிகாரிகள் மாநாட்டில் பங்குபற்றியுள்ளனர்.

இதன் போது பொலிஸ்மா அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

"பயங்கரவாதம் தொடர்பில், அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதொரு கருத்து இருக்க வேண்டும்.

சர்வதேச ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும், பயங்கரவாதம் தொடர்பில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்ற போதிலும், அனைத்து நாடுகளும் அந்தப் பயங்கரவாதம் தொடர்பான ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இல்லாவிடின், சர்வதேச ரீதியில் வியாபித்திருக்கின்ற பயங்கரவாதத்தை முறியடிப்பது கடினமாகிவிடும்.

இலங்கையிலிருந்து, 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாதம் துடைத்தெறியப் பட்ட நிலையில், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலேயே, இலங்கை அரசு அவதானம் செலுத்தி வருகின்றது என்று அவர் மேலும் கூறினார். (ஏ)

## கூகுளில் அமெ. தேர்தல் விவரம் தேடிய நாடுகளில் இலங்கையும்

கொழும்பு, நவ.11

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கூகுளில் தேடுவதில் இலங்கையர்கள் அதிகம் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று பதிவாகியுள்ளது. கூகுள் தேடலில் கடந்த ஒரு வாரத்துக்குள், அமெரிக்கத் தேர்தல் தொடர்பில் 24 வீதமான ஆய்வுகளை இலங்கையர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இது தெற்காசியாவில் உள்ள நாடுகளில் அதிக ஆர்வம் காட்டிய நாடாக இலங்கையைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தியாவில் 18 வீதமானோர் இதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

பாகிஸ்தானில் 10 வீதமானோர் கூகுளைப் பயன்படுத்தி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தகவல் பெற்றுள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தில் தாய்வானில் மாத்திரம், 33 வீதமானோர் ஆர்வத்தைக் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தேர்தல் தொடர்பில் அதிகமாக, மக்கள் ஆர்வத்தை ஈர்த்திருந்த நாடாக கனடா காணப்பட்டுள்ளதாகவும் கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஏ)

## சந்தேகநபர்கள் அணிவகுப்பு; பிரத்தியேக ஆடை அறிமுகம்

கொழும்பு, நவ.11

சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தும் போது அவர்களுக்கென்று புதிய வகை ஆடை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக ஆஸ்திரேலியாவிலிருந்து இந்த ஆடைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அணிவகுப்புக்கு உட்படுத்தும் சந்தேகநபர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஜக்கெற் ஒன்றை பயன்படுத்தும் நடவடிக்கை ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தனசிங்க தெரிவித்தார்.

ஆனால், இதுவரை காலமும் சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தத் துணி ஒன்றே போர்த்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## தினசரி ராசி பலன் 11.11.2016

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை | : 10.00 – 11.00 |
| | மாலை | : 4.45 – 5.45 |
| ராகு காலம் | | : 10.30 – 12.30 |
| குளிகன் | | : 7.30 – 9.00 |
| எமகண்டம் | | : 3.00 – 4.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்** : பெருமை – இன்று திடீர் புகழாரம் தங்கள் வாசல் நாடி வரும் நன்னாள்.

**ரிஷபம்** : அமைதி – மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி எனும் அமைதி காணும் நாள்.

**மிதுனம்** : உழைப்பு – அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட வேண்டும்.

**கடகம்** : ஆக்கம் – இன்று உங்களுடைய செயலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்** : ஆதரவு – இன்று சந்திராஷ்டமம் என்பதால் வீண்பேச்சைக் குறைத்தால் உறவினர்களாலும், அந்நியர்களாலும் ஆதரவு கிடைக்கும்.
சந்திராஷ்டமம்: பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**கன்னி** : பாராட்டு – உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் வந்து சேரும்.

**துலாம்**: பாசம் – அனைவரிடத்திலும் அன்புடன் நடந்துகொள்வதால் அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்**: நஷ்டம் – அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**தனுசு**: விருத்தி – இன்று எடுக்கும் அனைத்து விஷயங்களிலும் விருத்தி கிடைக்கும்.

**மகரம்**: நட்பு – நண்பர்களின் அரவணைப்புக் கிடைத்து நலம் நல்கும் நன்னாள்.

**கும்பம்**: முயற்சி – நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்**: இன்பம் – மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

## கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிடமாட்டோம்

### அமைச்சர் திகாம்பரத்தைச் சந்தித்த தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிப்பு

ஹற்றன், நவ.11

தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டங்கள் தொடரும் என்று ஹற்றன் போடைஸ் தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சருமான பழனி திகாம்பரத்தைச் சந்தித்து தமது கோரிக்கைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த அமைச்சர் பழனி திகாம்பரம் உரிய தோட்ட அதிகாரிகளுடன் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு தொழிலாளரின் நியாயங்களை எடுத்துரைத்துள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும் இதன்போது வருகை தந்திருந்த அனைத்து தொழிற்சங்க தரப்பினதும் இணக்கப்பாட்டுக்கு ஏற்ப பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டங்களில் தேயிலைக் கொழுந்துகளை நிலுவை செய்வதற்கு நவீன தொழில் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவற்கு தொழிலாளர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

எனினும் நவீன தொழில் நுட்பம் என்ற போர்வையில் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படு வதை அனுமதிக்க முடியாது.

அறிமுகப்படுத்தபட்டுள்ள புதிய முறையால் தராசின் நியம அளவை மாற்றியமைக்கக் கூடிய ரிமோட் கன்ட்ரோல் முறை குறித்த சந்தேகம் நிவிர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் அளவை பதிவு செய்யும் டிஜிட்டல் அட்டை முறைக்கு மேலதிகமாக வழமையாக நிறைகளை பதிவு செய்து கொடுக்கும் எழுத்திலான பட்டியல் படிவம் வழங்கப்பட வேண்டும்.

குறித்த கோரிக்கைகள் தொடர்பில் தோட்ட முகாமைத்துவம் ஆராய்ந்து தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் புதிய முறை உறுதிப்படுத்தப்படும் வரை இதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்று இதன்போது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தீர்வுகள் பெற்றுத் தரும் வரை பழைய முறைமையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தாம் குறிப்பிட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தோட்ட நிர்வாகம் செயற்படும் பட்சத்தில் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிடுவது என்றும் இல்லாவிட்டால் உரிய தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். திலகராஜ், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். பிலிப், உபதலைவர் எஸ் நகுலேஸ்வரன், இலங்கை தொழிலாளர் சங்க அமைப்பாளரும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினருமான ராஜேந்திரன், மலையக மக்கள் முன்னணி தொழிலுறவு அதிகாரிகள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களின் தோட்ட கமிட்டி தலைவர்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## ஏறாவூரில் 3 குண்டுகள் பொலிஸாரால் மீட்பு



மட்டக்களப்பு, நவ.11

பனைமரத்துக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட 40 மில்லி மீற்றர் அளவிலான 3 குண்டுகள் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்படி மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாதுறை தீவு பகுதியில் குறித்த குண்டுகளை மீட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸாரும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இந்தக் குண்டுகளை மீட்டுள்ளனர்.

அந்தக் குண்டுகள் பிளாஸ்டிக் கொள்கலன் ஒன்றினுள் மிகவும் பாதுகாப்பான முறையில் சுற்றப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டு இருந்தன என்று பொலிஸார் கூறினர்.

மேலும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஏ)

காலைக்கதிர்
Kalaikkathir

தமிழன் வழிகாட்டி
Tamils' Guide

கரம்கோர்த்துக் களமிறங்கும்



## வர்த்தக வளர்ச்சிக்கான விளம்பரப் புரட்சி

கனடாவின் தமிழன் வழிகாட்டி இணையதள விளம்பரங்களை யாழ்ப்பாண காலைக்கதிர் பத்திரிகையில் இலவசமாகப் படிக்கலாம். இதேவேளை காலைக்கதிர் விளம்பரங்களை www.tamilsguide.comல் இலவசமாகப் பார்க்கலாம்.

இன்றே உங்கள் கனடிய உறவுகளிற்கு அழைத்து இந்த இலவச இரகசியத்தை சொல்லுங்கள்

# www.tamilsguide.com

info@tamilsguide.com 416 615 4646

இல்லாத விடயம்
இல்லாத இணையம்

The Imperial College of Australia
striving for excellence
RTO 121966 CRICOS 02858M

# Enrolment Open For International Students

**Faculty of Telecommunication Engineering**
(Cert III - Advanced Diploma & Graduate Diploma)

**Faculty of Information & Communication Technology**
(Cert III - Advanced Diploma)

**Faculty of Hospitality Management**
(Cert III - Advanced Diploma)
(Commercial Cookery)

**Faculty of Business and Management**
(Certificate IV to Advanced Diploma)

WHY STUDY AT IMPERIAL?

- ISO 9001 Certified Education Provider
- Delivering Quality Education since 2007
- Trainers with Industry Experience
- Hands on Training
- Exciting Career Pathways



Australia FutureUnlimited | STUDY MELBOURNE | ACPET Australian Council for Private Education and Training | Study in Australia Live. Learn. Grow.

**CONTACT US & ENROL TODAY**

For detailed information on all our courses, fees and selection criteria, please visit the college website at

**www.imperial.edu.au**


212 Hoddle Street, Abbotsford VIC 3067,Australia / P:0394174777/ F:0394174748/ E:info@imperial.edu.au

The Imperial College of Australia ABN 85123406039

# காவியக் காதலா... ஹோர்மோன் சேஷ்டையா... ?

# தவிர்க்கவே முடியாத.... காதல் பரீட்சை...!

● ஜஸ்மிதா



பார்த்தவுடன் மனம் பூப்பூக்கும் .... நினைத்தாலே போதும்.... சுற்றிலும் வண்ணத்துப்பூச்சிகள் சிற கடிக்கும்.....வானொலிகளின்காதல் பாடல்கள் எல்லாம் உங்களுக்காகவே ஒலிபரப்பாவனவாகப் பரவசம் பரவும்.... உலகம் மறக்கும்....

இப்படி காதல் வானில் பறந்து கொண்டிருந்தாலும்.... மனதின் மூலையில் எச்சரிக்கை மணி ஒன்று அடித்துக் கொண்டேயிருக்கும்...

'உருகி உருகிக் காதலிக்கிறாளே' என்றோ....'உயிரே நீதான்' என்று நம்மையே சுத்துகிறானே' என்றோ... உங்கள் ஆள் மீது அன்பு பொங்கி வழிந்தாலும், இது கடைசி வரை நின்று பிடிக்குமா...? இல்லை இடையிலேயே மாய்ந்து போகுமா? என்று எப்படிக் கண்டுபிடிப்பது....?

கவலையே வேண்டாம்... இதுக்கென்றே பரீட்சை இருக்கிறது... உங்களது காதல் காவியக் காதலா... அல்லது வெறும் ஹோர்மோன் கலாட்டாவா? என்று கண்டுபிடிக்க இதோ சின்னதாக ஒரு சோதனை.......!

மணிக் கணக்காகக் காதல் கதை பேசிக் கொண்டிருந்தாலும், நடுவே உங்கள் குடும்பத்தைப் பற்றி அக்கறையாக விசாரிக்கிறாரா?' அப்பா எப்படி இருக்கிறார்...?','தம்பி படிப்பு எப்படிப் போகிறது...?'என்று ஏதாவது கேட்கிறாரா? இப்படி ஆர்வம் காட்டினால் ஆள் கொஞ்சம் அக்கறையுடன் தான் இருக்கிறார் என்று அர்த்தம். குடும்பத்தையெல்லாம் ஓரம் கட்டிவிட்டுகாணும் பொழுதினிலே'கடலைவறுத்தோமா... தொட்டுப்பார்த்தோமா...?'என்று இருந்தால் ...: நீங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும்.....

கார்கில்ஸோ கடைத் தெருவோ எங்கு போனாலும் ஆள் உங்கள் பணத்தில் நீந்திக் குளிக்கிறாரா?பக்கத்திலேயே இருந்து குலாவி விட்டு, பணம் செலுத்தும் சமயத்தில் மட்டும் கைகழுவ நழுவுகிறாரா? சந்தேகமில்லை...சரியான வறுகல்தான்... பணம் வற்றினால் கொக்குப் பறந்திடும்...


உங்களிடம் கதைக்கும் போதே அடிக்கடி உங்கள் ஆளின் கைபேசி அடிக்கிறதா? அவர் எடுத்து'அடுத்த கிழமை கொழும்பு போகிறேன், அமைச்சரை பார்க்கிறேன்','கன்டாவிலை இருந்து அக்கா கதைக்கிறீங்களா...அடுத்த மாசம் வாறீங்களா?','அண்ணா சுவிஸில் இன்னொரு வீடு வாங்கீட்டிங்களா?'என்ற வகையிலேயே உரையாடினால் பெரும்பாலும் திரையில்லாமலேயே படம் காட்டுபவராக இருப்பார். உங்களோடு வரும்போது பிச்சைக்காரருக்கு 50 ரூபா போடுவது, அடிக்கடி திரைப்பட வசனங்களை அள்ளித் தெளிப்பது என்பதெல்லாம் நடந்தால் கொஞ்சம் யோசியுங்கள்... ஏனென்றால்... இது உங்கள் வாழ்க்கை.

கதைப்பது ஒரு மணித்தியாலம், அதில் பெரும்பகுதி வேறு யாரையோ பற்றிப் புகழ்கிறாரா? 'நளினி நல்லா பாடுகிறாள்', 'சிவா நல்லா கவிதை எழுதுகிறான்' என்று உங்களை வெறுப்பேற்றும்படி தொடர்ந்து கதைக்கிறாரா? உங்கள் ஆள் மனம் அலைபாய்கிறது என்று அர்த்தம்....இந்தமாதிரியான ஆள் நின்று நிலைப்பது கடினம்.

நீங்கள் உங்கள் ஆளிடம் வேறு யாரையோ பற்றிச் சிலாகித்தாலும் பொங்காமல் பொறுமையாக 'அப்படியா?' என்று ஆறுதலாகக் கேட்டுக்கொண்டிருக்கிறாரா? அவர் நம்பகமானவராக இருக்கவாய்ப்பு மிகவும் குறைவு...காதலின் முக்கிய குணமே 'தனக்கு மட்டுமே உரியவராக்க ஆசைப்படல். அப்படி இல்லாமல்' எக்கேடோ கெட்டுப் போகட்டும். இருக்கும்வரை அனுபவிப்போம்' என்று நினைப்பவராக அவர் இருக்கலாம் ...அவதானம் அவசியம்.

வேறு தொலைபேசியிலிருந்து எதிர்பாராமல் அழைக்கும்போது உங்கள் ஆள் 'வேறு யாரோ என்று நினைத்துவழிந்துவிட்டு... பிறகு' ஓ..நீரா..நான் அக்காவின்மகள் என்றுநினைத்தேன்...பெரியப்பாவின் மகன் என்று நினைத்தேன்' என்று சமாளிக்கிறாரா?ம் ஹூம்..இந்த ஆள் சரிப்பட்டு வரமாட்டார்.

உங்கள் ஆளை வேறொரு ஆளுடன் பேருந்து நிலையத்திலோ கடையிலோ காண நேரிட்டால், அவர் உற்சாகமாக புதியவரை அறிமுகம் செய்து வைக்கிறாரா என்று பாருங்கள். உங்கள் ஆள் மோட்டார் சைக்கிளில் வேறொருவருடன் செல் லும் போது உங்களைக் கண்டால்



தெறித்து ஓடுகிறாரா அல்லது மகிழ்ச்சியாக அருகே வருகிறாரா என்று கவனியுங்கள்...குற்றமுள்ள நெஞ்சாக இருந்தால் குறுகுறுக்கும் அல்லவா?

உங்களைப் பார்க்கும் போதெல்லாம் 'நகத்தை ஏன் வெட்டவில்லை? இந்த சட்டை நிறம் உமக்குப் பொருந்தவில்லை..'என்றெல்லாம் உங்களைக் கவனித்து, அக்கறையாகச் சொல்கிறார் என்றால் உங்கள் ஆள் பாசமாகத்தான் இருக்கிறார்.

இப்படி எதையும் கண்டு கொள்ளாமல் 'இந்தப் புத்தகத்தை நகலெடுத்துத் தாறியா? சைக்கிளை திருத்தித் தாறியா? புதுப்படத்துக்கு 7 நுழைவுச்சீட்டு வாங்கித் தாறியா? என்று தன் கருமமே கண்ணாக இருக்கிறார் என்றால் நிலைமை அபாயக் கட்டத்தில்தான் இருக்கிறது.....

பிறந்தநாளை ஞாபகம் வைத்து வாழ்த்துகிறாரா? மழை பெய்திருந்தால் 'வீட்டுக்கு நனையாமல் போய்ச் சேர்ந்தீரா' என்று விசாரிக்கிறாரா? பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த உதவுகிறாரா? சந்திக்க வருவதாகச் சொல்லி விட்டுவரமுடியாமல்போனால் வருத்தப்பட்டுக் கவலை தெரிவிக்கிறாரா? இதுமாதிரியான விடயங்கள் நடந்தால்... கொடுத்துவைத்தவர்நீங்கள்.

'பிறந்த நாளா..மறந்திட்டேனே..', நேற்றுப்பின்னேரம் வருவதாகச் சொன்னேனா.. ஞாபகமில்லையே' என்றெல்லாம் திரைக் கதை வசனம் எழுதுகிறாரா? இருவரும் இருக்கும்போது கைபேசியில் வரும் குறுஞ்செய்திகளை அவசர அவசரமாக அழிக்கிறாரா? வழிதெருவில் யாரை யாவது பார்த்துப் பயந்து உங்களை அங்கேயே விட்டு விட்டு ஆள் காணாமல் போகிறாரா? திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் சில நாள்கள் தலை மறைவாகிறாரா...? சிவப்பு விளக்கு எரிகிறது... எச்சரிக்கையாக இருங்கள். ●

---

# வலி. வடக்கில் அனைத்தையும் பறிகொடுத்து தவிப்போருக்கு இனி வீடுகள் கிடைக்குமா?

● இ.மலர்மகன்

## நல்லிணக்க அரசு நம்பிக்கையை வீணடிக்கக் கூடாது

மஹிந்த அரசின் காலத்தில் ஒருபோதும் விடுவிக்கப்பட மாட்டாது எனக் கருதப்பட்ட காங்கேசன்துறையும், வலி.வடக்கின் சில பகுதிகளும் மைத்திரி அரசின் காலத்தில் விடுவிக்கப்பட்டமை மைத்திரி– ரணில் அரசின் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளக் காரணமாக அமைந்துவிட்டது. அந்த நம்பிக்கையோடு அப்பகுதிக்குள் மீள்குடியேறச் சென்ற மக்களுக்குக் கிடைத்ததோ அதிர்ச்சியும் கவலைகளுமே ஒழிய வேறில்லை எனலாம்.

ஏனெனில், அங்கே அவர்கள் சென்ற வேளை தமது வாழ்விடங்கள் சுடுகாடாய்க் கிடந்ததையே அவர்கள் கண்களால் கண்டனர். அவர்கள் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த இடங்கள் அனைத்தும் அடையாளமே தெரியாமல் இடித்து அழிக்கப்பட்டிருந்தன. காடு மண்டிக் கிடந்த கட்டாந்தரைகளைத் துப்புரவு செய்து நிலப்பரப்புக்களின் எல்லைகளைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாகி விட்டது. அதனால் 25 வருடங் கள் ஒட்டி உறவாடிய மக்கள் பிளவுபட்டு நிற்கின்றார்கள். காணி எல்லைகள்தான் அவர்களைப் பிளவுபடுத்திவிட்டன.

அவர்களின் பூர்வீக வாழ்விடங்களை அழித்த அரசு, அவற்றை மீளவும்அமைத்துக் கொடுப்பதற்கு விதிக்கும் நிபந்தனை வேறு. அதாவது இடம் பெயர்ந்துதங்கியிருந்த காலத்தில் வலி. வடக்கு மக்கள் புதிதாகக் காணிகளை வாங்கியிருந்தால் அல்லது வீடுகளைக் கட்டியிருந்தால் அவர்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அரசின் இந்தத் தீர்மானம் குறித்து கிராமசேவகர்கள் வெளிப்படுத்திவருகின்றனர். இது அரசின் பார்வையில் சரியாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனக் குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது. அரசின் இந்த முடிவு மீள்பரிசீலனைக்கு உட் படுத்த வேண் டியதன் அவசியம் உணரப்படுகிறது.

ஏனெனில், இடம்பெயர்ந்த நிலையில் காணிகளை, வீடுகளைக் கொள்வனவு செய்தவர்கள் பணத்துக்கு மேல்பணத்தைச் சேர்த்து அதைக் கொள்வனவு செய்யவில்லை. சிலர் வெளிநாட்டில் வாழும் தங்களின் உறவினர்கள் மூலம் அவற்றைக் கொள்வனவு செய் துள்ளனர். பலர் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் இருந்து பெற்ற இம்சைகளாலும் விரும்பத்தகாத செயல்களாலும், அடிக்கடி வீடு மாற வேண்டி இருந்தது. இவ்வாறு கஷ்டங்களை அனுபவித்த அவர்கள் தங்கள் நகைகளை விற்றும், கடன் பெற்றும், வட்டிக்கு எடுத்தும் இந்தச் சொத்துக்களை வாங்கியுள்ளனர். இந்தக் கடன்களுக்கும் – துன்பங்களுக்கும் ஊரில் தங்களுக்கென்று இருக்கின்ற வீடுகள், சொத்துக்கள் ஆறுதலாக அமையும் என்று வந்தவர்களுக்கு, கிராமசேவையா ளர்கள் கூறுகின்ற அரசின் முடிவானது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகின்றது. நல்லிணக்க அரசின் இந்தப் போக்கு மக்களை வெறுப்படைய வைத்துள்ளது.

போர் என்ற போர்வையில் மக்களின் சொத்துக்கள், உடைமைகளைச் சூறையாடிய அரசுகள், அவர்களுக்கு நிவா ரணம் வழங்க வேண்டும். அதை விடுத்து அந்த மக்களை இனியும் இம்சைப் படுத்தாது, அவர்கள் நிம்மதியாக சொந்த மண்ணில் காலூன்றி நிற்க வழிவகை செய்வதே சிறந்தது.

மைத்திரி – ரணிலின் நல்லிணக்க அரசு அதைச் செய்யுமா...? ●

# கருத்துலகமும் வாழ்வியக்கமும் 01

**நாம்** வாழும் இந்த உலகத்தைப் பல உலகங்களாக வகைப்படுத்தலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக எங்கும் வியாபித்து நிற்கும் பேருலகம். 9 கிரகங்களில் ஒரு கிரகமாக, சூரியன் என்ற நட்சத்திரத்தைச் சுற்றி உலாவரும் பூவுலகம். மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம். மூளைய நரம்பு மண்டலமாக மண்டையின் ஓட்டுக்குள் மறைந்திருந்து செயற்படும் மன உலகம். இப்படியாகப் பல உலகங்களுக்குள் எமது வாழ்க்கை ஓடுகிறது. இந்த வகையில், கருத்துலகம் என்ற ஓர் உலகமும் உண்டு.

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப்பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக் குவியல்களைக் கொண்ட உலகம். பலவகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டு மொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகம் எனக் குறிப்பிடுகின்றேன்.

கருத்துக்கள் என்றால் மனிதர்களின் மனக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழல் உருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்துக்கு அகப்படாத பூடகமான மானசீக பொருள்களும் அல்ல.

கருத்துக்களுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகில் இருந்து பிறப்பெடுக்கின்றன. அவை மனிதர்களைப் பற்றிக்கொள்கின்றன. கருத்துக்களுக்கு அபார சக்தி உண்டு. அவை மனிதர்களைப் பற்றிக்கொண்டு அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியுடையனவாக இயங்குகின்றன.

அது ஒரு பொது நூலகம். நகரப்புறத்தில் ஒரு அழகிய பூங்காவுக்கு அண்மையில், அமைதியான சூழலில் அமையப்பெற்றிருக்கிறது. அதனுள் ஆயிரமாயிரம் நூல்கள், நேர்த்தியாக ஒழுங்கு வரிசையாக, அலுமாரிகளிலும், நிலையடுக்குகளிலும் அடுக்கப்பட்டிருந்தன. இலக்கியம், தத்துவம், சட்டம், அரசியல், சமூகவியல், இறையியல் என்ற ரீதியில் பல துறைசார்ந்த பல்லாயிரம் புத்தகங்கள். ஒரு பிரமாண்டமான கருத்துலகத்தின் பொருளியல் தோற்றப்பாடாக அந்நூலகம் விளங்கியது.

அந்த நூல்கள் அனைத்துமே உயிரற்று சடப்பொருள்களாக, வெறும் அச்சிடப்பட்ட கடதாசிப் பண்டங்களாகக் காட்சி தந்தபோதும், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவோர் அதிசயமான இறவாப் பொருள் ஒளிந்து கிடந்தது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருந்தது. அந்தப் படைப்பாளி மரணித்துப் பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம் அல்லது பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கலாம். ஆயினும், அப்படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள், அவன் ஆய்வு செய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புக்கள், வாழ்வனுபவத்திலிருந்து அவன் பெற்ற தரிசனங்கள் - எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியாக, காலத்தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அங்கு இருப்புக் கொண்டு இருந்தன.

தினமும் அந்த நூலகத்திற்குப் பல வாசகர்கள் வருவார்கள். அவரவருக்குப் பிடித்தமான துறைகளில், அவரவருக்குப் பிடித்தமான நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிப்பார்கள். வாசிப்பில், வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கும் மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ்கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கின்றது. படைப்பாளியின் எழுத்துலகில், அவனது கருத்துலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன், படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான்; ஒரு விசாரணையை நடத்துகிறான். அந்தத் தேடுதலில்- அந்த விசாரணையில்- படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக்கொள்கிறது.கருத்துக்கள் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை நிகழ்கிறது.



அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்துப் பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மனிதர்களை அது ஆழமாகப் பற்றிக்கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, பாறைகளைத் தகர்த்து கலை வடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்துக்கு மனிதன் விளக்கங்களைக் கொடுத்தான். வியாக்கியானங்கள் அளித்தான். அர்த்தங்களைக் குவித்தான். வேதங்கள் தோன்றின; சித்தாந்தங்கள் பிறந்தன; கிரியைகள், சடங்குகள் தோன்றின; நிறுவனங்கள், நிர்வாகப் பீடங்கள் தோன்றின; கோடானு கோடி அடியார்கள் தோன்றினர்; ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக் கருத்திலிருந்து இப்பூவுலகில் பல நாகரிகங்கள் தோன்றின. கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பௌத்த நாகரிகங்களாக மானிடம் பிளவுபட்டது. போர்கள் நிகழ்ந்தன. நாடுகளும் இனங்களும் மோதின. பூமியில் இரத்த ஆறுகள் ஓடின. அந்தக் கருத்து, மனிதர்களை ஆழமாகப் பற்றிப் பிடித்து அவர்களை ஆட்டிப் படைத்தது.

கருத்துலகம் மனிதர்களை இயந்திரமாக இயக்குகின்றது. மனிதர்களின் நம்பிக்கைகளுக்கும் அவர்களது சமூக செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை ஆட்கொண்டு விடுகிறது. நாம் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டி விடுகிறது. விவரம் அறியாத பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்து விடுகிறது.

நாம் பிறந்த கணத்திலிருந்து எமக்கு ஒரு பெயர் என்றும், எமக்கு ஒரு சாதி என்றும், எமக்கு ஒரு மதம் என்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக் குறிகள் சுடுகாடு வரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோயில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகிய நண்பர்கள், நாம் வரித்துக்கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட உறவுகளால் காலங்காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடுகொள்கிறது. எம்மீது திணிக்கப்பட்டதும் நாமாகப் பற்றிக்கொண்டதுமான கருத்துக்கள் எமக்குள்ளே இருப்புக் கொண்டு எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் கருத்துக்களால் வனையப் பெற்ற சமூகப் பொம்மைகள்.

கோயிலில் அந்தச் சடங்கு நடக்கிறது. குருவானவர் பூசை செய்கிறார். அப்பத்தையும் முந்திரிப்பழச் சாறுடைய கிண்ணத்தையும் உயர்த்திப் பிடித்தவாறு செபிக்கிறார். சிலுவையில் நிகழ்ந்த கடவுளின் மரணம் குறியீட்டுச் சடங்காக மேடை ஏறுகிறது. அவன் முழங்காலிட்டபடி தலைகுனிந்து, கைகூப்பியவாறு வணங்குகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை ஆட்கொண்டு இயக்கியது. அன்று காலை, ஒரு மணி நேரமாக அவனும் அவனுடன் சேர்ந்து மற்றவர்களுமாக அந்த மத பண்பாட்டுச்சடங்கில்பங்குகொண்டனர்.

> “கருத்துக்களுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகில் இருந்து பிறப்பெடுக்கின்றன. அவை மனிதர்களைப் பற்றிக் கொள்கின்றன. கருத்துக்களுக்கு அபார சக்தி உண்டு. அவை மனிதர்களைப் பற்றிக்கொண்டு அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியுடையனவாக இயங்குகின்றன.”

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாய சடங்குகள், உறவு முறைகள் எல்லாமாக அவனது சமூகச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்துவிடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாகத் தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்கு கொள்ளவும். கருத்து உலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனி மனித வாழ்வுக்கும், சமூக சீவியத்துக்கும் கருத்துலகம் ஆதாரமாக விளங்குகின்றது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது. சமூக உலகத்தின் ஒரு துணை உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஓர் அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*“இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு” - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*


2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில்
ரணிலை தோற்கடிக்கும் முடிவை புலிகள் எடுத்தது ஏன்?
மஹிந்த ராஜபக்ஷ
வெற்றி பெறும் வகையில் புலிகள் தீர்மானம் எடுத்ததன்
பின்னணி என்ன?
பணம் பெற்றுக் கொண்டா அப்படி நடந்தார்கள்?
திரைமறைவில் கட்டவிழ்ந்த விடயங்கள் என்ன?
விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் எழுதும் உண்மை விவரங்களின் தொகுப்பு...
விரைவில் உங்கள் 'காலைக்கதிர்' நாளிதழில்...


TILKO
JAFFNA CITY HOTEL
TILKO
hotels
TILKO JAFFNA CITY HOTEL
Luxury Rooms
Banquet Hall
Conference Hall
Restaurant / Bar
Swimming Pool
Gym / Spa
Free Wifi
In the Heart of Jaffna City
70/6, K.K.S. Road, Jaffna. Sri Lanka.
Tel : 021 222 5969, 021 720 0707
e.mail : info@gmail.com
Web. www.cityhoteljaffna.com
Gym
Luxury Rooms
Swimming Pool
Conference Hall
Banquet Hall
Restaurant

# பௌர்ணமி வெளிச்சத்தை விடவும் 30 மடங்கு ஒளி வீசும் வெண்நிலா

## 68 ஆண்டுகளுக்குப் பின்னர் வானில் தென்படுகிறது

பௌர்ணமி நிலவை விட 30 மடங்கு அதிக வெளிச்சத்தில் தோன்றும் நிலவை எதிர்வரும் 14 ஆம் திகதி அனைவரும் காணலாம். 68 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த அரியதான காட்சி தெரியும்.

இது தொடர்பாக சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறிருப்பதாவது:-

'சூப்பர் மூன்' எனப்படுவது பூமிக்கு மிக அருகில் நிலவு காட்சியளிப்பதாகும். அந்த நேரத்தில் நிலவு மிகவும் பிரகாசமாகவும், மிகப் பெரியதாகவும் தோற்றமளிக்கும்.

இந்த நிகழ்வானது 70 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடப்பதாகும். இந்த 'சூப்பர் மூன்' கடந்த 1948 ஆம் ஆண்டு தோன்றியது. அதனைத்தொடர்ந்து இந்த ஆண்டு அனைவருக்கும் காட்சியளிக்க உள்ளது.

நிலவு பூமியில் இருந்து 3 லட்சத்து 84 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தொலைவில் சுற்றி வருகிறது. இந்தப் பூமியைச் சுற்றிவரும் நிலவானது குறிப்பிட்ட நீள்வட்டப் பாதையில் செல்லாமல் அதில் இருந்து விலகி சில நேரங்களில் பூமிக்கு அதன் தொலைவில் இருந்து 48 ஆயிரம் கிலோமீற்றர் அருகில் வந்து செல்லும்.

இந்தச் சூப்பர் மூன்' டுபாயில் அமீரக நேரப்படி மாலை 5.52 மணிக்கு முழுமையாக காட்சி தர உள்ளது. இந்தக் காட்சியை டுபாயில் வசிக்கும் அனைவரும் காண முடியும். இந்த நிகழ்வு கடந்த 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வந்ததைவிட சிறப்பானதாக இருக்கும்.

வானத்தில் சாதாரணமாக பௌர்ணமி அன்று நிலவைக் காண்பதை விட பல மடங்கு பெரியதாக காட்சியளிக்கும். அந்த நேரத்தில் அதன் வெளிச்சம் 30 மடங்கு அதிகமானதாக இருக்கும்.

இதற்காக அமீரக விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் காட்சியைப் பார்க்காமல் தவற விட்டவர்கள், பின்னர் டெலஸ்கோப் மூலமாகவும், கோளரங்க காட்சிகள் மூலமாகவும் காணலாம்.

'சூப்பர் மூன்' வானில் எந்த அளவு தெளிவாகவும், பெரியதாகவும் இருக்கும் என்பதை நாசா தற்போது படமாக வெளியிட்டுள்ளது–என்றுள்ளது. (ஐ)

## மாணவருக்கு திசைமுகப்படுத்தும் வகுப்பு நாளை

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கலைமாணி பகுதி -1 பரீசைக்கான திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் நாள்ள சனிக்கிழமை முதல் டிசம்பர் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறும்.

இவ்வகுப்புக்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை மண்டபத்தில் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிறு ஆகிய வார இறுதி நாள்களில்நடைபெறவுள்ளன.

வகுப்புக்கள் தொடர்பான நேர அட்டவணைகளை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்ள்ளது. (இ–7)

# ஈழத்து சபரிமலை ஐயப்ப ஆலய மகரஜோதி விழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.11

கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்ப தேவஸ்தான வருடாந்த மகரஜோதி மண்டல பூஜை பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 60 நாள்கள் விழா நடைபெறவுள்ளது.

கணபதி ஹோமத்துடன் விழா ஆரம்பமாகி தொடர்ந்து சாமிமார்களுக்கு புனித விரத மாலை அணிவிக்கப்படும். அன்று தொடக்கம் மண்டல விரத பூஜைகள்சிறப்பாகநடைபெறவுள்ளன.

விழாவுக்கு கனடாவிலிருந்து வருகைதரும் ஆன்மீகச் செம்மல் குருசாமி க.தம்பிராசா தேவஸ்தான சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் நடராஜ பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் இருந்து இருமுடி கட்டி நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து ஐயன் யானை மேல் பவனியும் இருமுடி யாத்திரையும் ஆரம்பமாகி திருவீதி உலா வந்து 18 ஆம் படி ஏறி சிறப்பு மண்டல படிப்பு பூஜை நடைபெறும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். அன்றையதினம் மாலை கொடி இறக்கமும் இடம் பெறவுள்ளது. (ஏ)

## வாலிப முன்னணி சம்மேளனம்



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் யாழ். மாவட்ட சம்மேளனம் அண்மையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் தேசிய தலைவர் கலாநிதி பி.எம். பாறூக் தலை மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை, நயினாதீவு ஆகிய நகரங்களை மையப்படுத்தி சம் மேளனம் அமைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வாலிப முன்னணியின் ஆலோசகர் எம்.எஸ். ரஹீம், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் பாருக் பதீன், யாழ். மாவட்ட அமைப்பாளர் எம். எல். லாபிர் உட்பட அனைத்து பிரதேச பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தேசிய தலைவர் கலாநிதி பி.எம்.பாறூக் உரையாற்றும் போது முஸ்லிம் லீக் வாலிப முன் னணி முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் வாலிபர்களுக்கு நாட்டுப்பற்றையும் சிறந்த தலைமைத்துவ பயிற்சியையும் வழங்கும் நோக்கி லேயே இந்த முன்னணி ஸ்தாபிக்கப்பட்டது. சமூகத்தின் தேவையறிந்து பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துவைத்தலுடன் சமூக சேவையில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கம் என்றார். தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. (இ–19)

## முத்து சஞ்சிகை ஜனவரியில்


யாழ்ப்பாணம், நவ.11

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் முழுநிலா முத்து சஞ்சிகை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படவுள்ளது.

வடமாகாணகல்வித்திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள முழுநிலா கலைவிழாவில் வைத்தே இச்சஞ்சிகைவெளியிடப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகைக்கான ஆக்கங்களை ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச கலை ஆர்வலர்களிடமிருந்து மாகாணக் கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார். (31)

# கஞ்சா பொதியுடன் குடும்பஸ்தர் கைது



மன்னார், நவ.11

மன்னார் எருக்கலம்பிட்டிப் பகுதியில் கடத்த முற்பட்ட கஞ்சா பொதியுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் கஞ்சா கடத்தப்படுகிறது என்று மன்னார் மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் எருக்கலம்பிட்டி பொலிஸார் உதவியுடன் வீடு ஒன்று சுற்றி வளைத்த போது கஞ்சா மீட்கப்பட்டது

அதனை எடுத்து வந்த அதே இடத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 40)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைஅதிபர்என்.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 'ஆறுதல்' நிறுவன சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்வார். நிகழ்வில் சான்றிதழ்களைத் திருமதி சிவமலர் டிவகலாலா வழங்குவார். (ஐ)

# வடமராட்சி கிழக்கு வீதிகளில் 2,500 கண்டல் மரங்கள் நடுகை

பருத்தித்துறை, நவ.11

வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 2,500 கண்டல் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. யாழ் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் மரக்கன்றுகளை தென்னிலங்கையில் இருந்து தருவித்து வழங்கியுள்ளார்.

கடனீரேரியை ஊடறுத்து பொது மக்களால் அமைக்கப்பட்ட இயக்கச்சி – கொடுக்கிளாய் வீதியின் இருமருங்கிலும் மற்றும் அப்பிரதேசத்திலும் இந்த மரக்கன்றுகள் மக்களின் பங்களிப்புடன் நடப்பட்டுள்ளன.

ஏற்கனவே செம்பியன் பற்று, நாகர்கோவில், அம்பன், குடத்தானை ஆகிய இடங்களில் கடனீரேரியை அண்டிய பகுதிகளில் கண்டல் தாவரம் செழித்து வளர்ந்து காணப்படுகின்றது. (இ-31)

# 'மனப்பட மனிதர்கள்' நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி, நவ.11

ரியூப்தமிழ்(TUBETAMIL) ஊடக அனுசரணையில் சி.செல்லத்துரை மாஸ்டர் எழுதிய 'மனப்பட மனிதர்கள்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலரும், கவிஞருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், வே.சிவயோகன், கே.தர்மலிங்கம், இ.ஆனோல்ட், கே.சயந்தன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையை ஈழத்து முதல் பெண் விமானியான துரை அர்ச்சனாவும், வாழ்த்துரையை மு.தங்கவேலும், ஊரவர் சார்பில் ச.க.தேவசிகாமணியும் நிகழ்த்துவார்கள். நூல் அறிமுகவுரையை, கம்பிகளின் மொழிபிறேமும், ஆய்வுரையை அப்பாத்துரை மாஸ்டரும் நிகழ்த்துவார்கள். (இ -30)

## ஜப்பான் சென்றார் பிரதமர் மோடி



டில்லி, நவ.11

பிரதமர் நரேந்திர மோடி மூன்றுநாள் அரசு முறை பயண மாக நேற்று ஜப்பான் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவரது இந்தப்பயணத்தில் இருநாடுகளுக்கிடையே அணு சக்தி ஒப்பந்தம் கையெழுத்தா கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானில் இரு நாடுகளுக் கிடையே நடைபெற உள்ள வரு டாந்த மாநாட்டில் மோடி கலந்து கொள்கிறார்.

அவருடன் அதிகாரிகள் குழு வும் செல்கிறது. ஜப்பான் மன்னர் அகிட்டோவை மோடி சந்திக் கவுள்ளார்.

இன்று ஜப்பான் பிரதமர் ஜின்சோ அபேயைச் சந்தித்துப் பேசும் மோடி, பொருளாதாரம், இராணுவம், அறிவியல் ஆய்வு ஆகிய துறைகளில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்க உள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அந்நாட்டுப் பிரதமர் அபே வுடன் புகழ்பெற்ற ஷின்கன் சென்புல்லட் ரயில் மூலம் கோபே நகருக்கு மோடி பயணிக்க உள் ளார். (ஏ)

# வங்கிகளில் அலையாக திரண்ட மக்கள் கூட்டம்

## 500, 1000 ரூபா தாள்களை மாற்றுவதற்காக

சென்னை, நவ.11

இந்தியா முழுவதும் 500 மற் றும் 1000 ரூபா தாள்களை மாற் றுவதற்காக பொதுமக்கள் நேற்று முன்தினம் வங்கிகளில் அலை யாகத் திரண்டனர். இதனால் பல்வேறு பகுதிகளில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

ரூ.500 மற்றும் ரூ.1000 தாள்கள் செல்லுபடியாகா என்று பிரதமர் நரேந்திர மோடி அறி வித்தார்.

மேலும், இந்த ரூபா தாள் களை வங்கிகளில் வைப்பிலிட்டு வரவு வைத்துக் கொள்ளலாம். 4 ஆயி ரம் ரூபா வரை புதிய 500, 2000 ரூபா தாள்களைப் பெற் றுக்கொள்ளலாம் என்றும் அறி விக்கப்பட்டிருந்தது.

தபால் நிலையங்களிலும் இதுபோன்று ரூபா தாள்களை மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய் யப்பட்டது.

அதேசமயம், நேற்று முன் தினம் வங்கிக்கு விடுமுறை என் பதால் மக்கள் அத்தியாவசிய பொருள்களை வாங்க முடியாமல் தவித்தனர். ஏ.ரி.எம். நிலையங் களிலும் இன்றுதான் புதிய 500 ரூபா, 2000 ரூபா தாள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.






ஒருநாள் விடுமுறைக்குப் பின்னர் நாடு முழுவதும் இன்று வங்கிகள் திறக்கப்பட்ட நிலையில், பணத்தை மாற்றுவதற்காகவும், சேமிப்புக் கணக்கில் இருந்து பணம் எடுப்பதற்காகவும் மக்கள் குவிந்துள்ளனர்.

நேற்றுக்காலைமுதலே நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்து புதிய 500 ரூபா மற்றும் 2000 ரூபாதாள்களைப்பெற்றுச்சென்ற வண்ணம் இருந்தனர்.

பல்வேறு பகுதிகளில் 500 ரூபா தாள்கள் வரவில்லை என் பதால் புதிய 2000 ரூபா மற்றும் 100 ரூபா தாள்கள் வழங்கப் படுகின்றன.

இதற்காக வங்கிகளில் விண் ணப்பப் படிவங்கள் விநியோகிக் கப்படுகின்றன.

அதனைப் பூர்த்தி செய்து கொடுத்து பணம் பெற்றுச் செல் கின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள வங்கிகள் மற்றும் தபால் நிலை யங்களில் பணம் மாற்றுவதற் காக மக்கள் குவிந்துள்ளனர்.

இதனால், பல்வேறு வங்கி களின் முன்பாக கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. கூட்டத்தை ஒழுங் குபடுத்தவும், பிரச்சினை ஏற்ப டாமல் தடுக்கவும் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். (ஏ)

## உத்தரப் பிரதேசத்தில் குவியல்களாக எரிக்கப்பட்ட ரூ. 500, 1000 தாள்கள்

உத்தரப் பிரதேச மாநிலம் பேரிலி நகரில் எரிந்த நிலை யில் 500, 1000 ரூபா தாள்கள் குவியல்களாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை கறுப்புப் பணப் பதுக்கல்காரர்களால் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

500, 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று பிரதமர் மோடி கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிப்பு வெளியிட்டார். இத னையடுத்து புதிய 500, 2000 ரூபா தாள்கள் நேற்று முதல் வங்கிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு மக்கள் புழக்கத் துக்கு வந்துகொண்டிருக்கின் றன.

இந்நிலையில் உத்தரப் பிரதேச மாநிலம் பேரிலி நக ரில் உள்ள பர்ஷா கேத வீதியில், மூடைகளில் பழைய 500 மற் றும் 1000 ரூபா தாள்கள் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. இவை கறுப்புப்பணப் பதுக் கல்காரர்களால் எரிக்கப்பட்டிருக் கலாம் என்று பொலிஸார் சந்





தேகிக்கின்றனர்.

இதுகுறித்து பேரிலிநகரின் தலைமை காவல் கண்காணிப் பாளர் கூறுகையில்.-

'500, 1000 ரூபா தாள்கள் பாதி கிழிந்து எரிந்த நிலையில் கிடைத்துள்ளன. இதுதொடர்பில் ரிசர்வ் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம். மேலும் எரிந்த தாள்கள் தொடர்பில் ஆய்வு செய்து வருகின்றோம் என்றுஅவர்தெரிவித்துள்ளார். (ஏ)

## மோடி அரசின் அறிவிப்புக்கு எதிரான வழக்கு நவ.15 இல்

சென்னை, நவ.11

500 மற்றும் 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்ற இந்திய மத்திய அரசின் அறி விப்புக்கு எதிராக தொடரப்பட்ட பொதுநல வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்படவுள்ளது.

கறுப்புப் பணம் மற்றும் கள் ளப் பணத்தை ஒழிக்கும் நட வடிக்கையாக இந்தியா முழுவ தும் புழக்கத்தில் உள்ள 500 ரூபா மற்றும் 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கைவ சமுள்ள இந்த ரூபா தாள்களை வங்கிகளில் வைப்புச் செய்து மாற்றிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 500 ரூபா, 1000 ரூபா தாள்கள் செல்லு படியாகா என்ற மத்திய அரசின் அறிவிப்புக்கு எதிராக சங்கம் லால் பாண்டே என்பவர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அவர் தனது மனுவில் தெரிவித்துள்ள தாவது;

'மத்திய அரசின் இந்தத் திட் டம் மக்களுக்கு மிகவும் சிரம மாக உள்ளது. அதனை செயற் படுத்த கூடுதல் கால அவகாசம் வேண்டும். எனவே, எனது மனுவை அவசர வழக்காக விசா ரிக்கவேண்டும்' என்றுகோரிக்கை விடுத்திருந்தார்.

இதுதொடர்பான வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி விசார ணைக்குஎடுத்துக்கொள்ளப்படும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது. (ஏ)

## புதிய ஆயிரம் ரூபா தாள்கள்! சில மாதங்களில் புழக்கத்துக்கு

சென்னை, நவ.11

புதிய ஆயிரம் ரூபா தாள்கள் இன்னும் சில மாதங்களில் புழக் கத்துக்கு விடப்படும் என்று இந் திய மத்திய பொருளாதார விவ காரத்துறை செயலாளர் நேற்று அறிவித்துள்ளார்.

கறுப்புப் பணத்தை ஒழிக்கும் நோக்கில் தற்போது புழக்கத்தில் உள்ள 500, 1000 ரூபா தாள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நள் ளிரவு முதல் செல்லுபடியாகா என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார்.

இதையடுத்து புதிதாக 500 மற்றும் 2000 ரூபா தாள்கள் அறிமுகம் செய்யப்பட்டு நேற்று முதல் வங்கிகள் வாயிலாகவும், இன்று முதல் ஏ.ரி.எம்.கள் மூல மாகவும் மக்களுக்கு வழங்கப்பட வுள்ளன.

இந்நிலையில், மீண்டும் ஆயிரம் ரூபா தாள்களை வெளி யிட உள்ளதாக மத்திய பொருளா தார விவகாரத்துறை செயலாளர் சக்திகாந்த் தாஸ் தெரிவித்துள் ளார். இந்த புதிய ஆயிரம் ரூபா தாள்கள் அளவிலும், வண்ணத்தி லும் வேறுபட்டவையாக இருக் கும்.

இன்னும் சில மாதங்களில் அந்த ரூபா தாள்கள் புழக்கத் துக்கு வரும். மேலும் இந்த தாள் கள் பாதுகாப்பு அம்சங்கள் அதி கம் கொண்டவையாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ஏ)

## முதல்வர் ஜெயலலிதா ஒரு வாரத்தில் வீட்டுக்கு

சென்னை, நவ.11

தமிழக முதல்வர் ஜெயலலிதா இன்னும் ஒரு வாரத்தில் வீடு திரும்ப உள்ளார் என்று லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் கூறியுள் ளார்.

முதல்வர் ஜெயலலிதா கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் சென்னை கிரீம்ஸ் வீதியில் அப்பலோ மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வரு கிறார்.

அவரின் உடல்நிலையில் தற் போது நல்ல முன்னேற்றம் ஏற் பட்டு வருவதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.



இந்நிலையில் லண்டனில் உள்ள மருத்துவர் ரிச்சர்ட்டை லண்டன் வாழ் தமிழர்கள் சந் தித்து முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிறப்பு சிகிச்சை அளித்ததற்காக நன்றி தெரிவித்தனர்.

சந்திப்பை அடுத்து ஜெயல லிதாவின் உடல் நிலை தற்போது நல்ல நிலையில் உள்ளது என் றும் இன்னும் ஒரு வாரத்தில் அவர் வீடுதிரும்புவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள் ளார்.

மேலும் முதல்வர் மீது தமிழக மக்கள் வைத்துள்ள அன்பைக் கண்டுவியந்துபோனேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஏ)

## அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஆபத்தில்லை என்கிறார் ஈரான் ஜனாதிபதி



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனினும், வல்லரசு நாடுகளுடன் தான் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஆபத்தில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு ஜனாதிபதி ஹஸன் ரௌஹானி கூறியதாவது:

"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, டொனால்ட் ட்ரம்ப் ஆட்சியமைத்தாலும், அவர் தேர்தல் பிரசாரத்தின்போது கூறியபடி ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை ரத்து செய்யமுடியாது.

வல்லரசு நாடுகளுடன் நாங்கள் செய்துகொண்டுள்ள அந்த ஒப்பந்தம், எந்த ஒரு தனி நாட்டுடனும் முடிந்துவிடாது.

எனவே, ஒரு நாட்டில் ஆட்சி ஏற்பட்டு, புதிய அரசு அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வது என்பது இயலாத காரியம்"– என்றார் அவர். (ஏ)

# ட்ரம்புக்கு எதிராகப் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்கள்

### நியூயோர்க் உட்பட 7 மாகாணங்களில்

வொஷிங்டன், நவ.11

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நியூயோர்க் உட்பட 7 மாகாணங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தேசியக் கொடியை எரித்தும், டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியும் பொது மக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதனால் அமெரிக்கா முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றது ஹிலாரி கிளிண்டனின் ஆதரவாளர்களுக்கும், கறுப்பின மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் தேர்தல் முடிவுகள் வெளியான சில நிமிடங்களில் கலிபோர்னியா மாகாண வீதிகளில் நேற்றுமுன்தினம் திடீரென நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது 'ட்ரம்ப் எங்களது ஜனாதிபதியல்ல' என அவர்கள் ஆவேசமாக முழக்கமிட்டனர். இதேபோல் போர்ட்லேண்ட் உள்ளிட்ட பகுதியில் ஹிலாரியின் ஆதரவாளர்களும் அமெரிக்க தேசியக் கொடியை தீயிட்டுக் கொளுத்தி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். மேலும் பிரதான சாலைகளில் டயர்களைக் கொளுத்தியும், ட்ரம்பின் உருவப் பொம்மையை எரித்தும் வன்முறையில் இறங்கினர்.

அதைத்தொடர்ந்து சான் டீகோ, சான்பிரான்சிஸ்கோ மற்றும் சான்ஜோஸ் பகுதிகளிலும் ட்ரம்ப் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்கள் வெடித்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


கலிபோர்னியா லொஸ்ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் வெஸ்ட்வுட் வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமைதியான முறையில் ஆர்ப் பாட்டம் நடைபெற்றதாகவும், எந்தவித அசம்பாவித சம்பவமும்நடைபெறவில்லைஎன்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஆக்லாந்தில்நடைபெற்றபோராட்டம் காரணமாக விரைவு படகுப் போக்கு வரத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் ட்ரம்பின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே திரண்டு வெற்றியைக் கொண்டாடி வருகின்றனர். அவர்கள் ட்ரம்பை வாழ்த்தி கோஷமிட்டபடி ஊர்வலமாகச் சென்றனர்.

சியாட்டில் நகரில் ட்ரம்புக்கு எதிராகப் பேரணி நடத்தப்பட்டது. இதில் பலர் கலந்து கொண்டனர். அப்போது மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சரமாரி யாகச் சுட்டார். 5 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 2 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூடு பேரணிக்குஎதிராகநடத்தப்படவில்லை என்று பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)



லண்டன் நகரில் ட்ராம் ஒன்று வழித்தடப் பாதையில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 5 பேர் உடல் நசுங்கி உயிரி ழந்தனர். விபத்துக்குள்ளான வாகனத்தில் 50 இற்கும் அதிகமானோர் பயணம் செய்தனர். தெற்கு லண்டனில் உள்ள முக்கிய சந்திப் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பாக வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஏ)

## இனிப்புப் பானங்கள் விற்க லண்டனில் விரைவில் தடை

லண்டன், நவ.11

உடல் பருமனைக் குறைத்து மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் அனைத்து இனிப்புப்பாணங்களினதும்விற்பனையைத்தடைசெய்வதுகுறித்து பிரிட்டனின் தேசிய சுகாதார சேவைகள் அமைப்பு பரிசீலனை செய்து வருகின்றது.

இந்தத்திட்டத்தை எதிர்வரும் ஆண்டுமுதல் நடைமுறைப் படுத்த எதிர்ப்பார்த்துள்ள அதே வேளை, இதனை வைத்தியசாலைகளில் இருந்து ஆரம்பிக்க எதிர்ப்பார்த்திருப்பதாக சுகாதார சேவைகள் அமைப்பின் தலைவர் சைமன் ஸ்டீவன்ஸ் தெரிவித்தார்.

உடல் பருமன் நாட்டில் பெரிய பிரச்சினையாக தோற்றம் பெற்றுள்ளது. இந்த நிலையில், இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கும் வகையிலேயே இனிப்புப் பானங்களுக்குத் தடை விதிக்கப்படுவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அதன் முதல் கட்டமாகவே வைத்தியசாலைகளில் இனிப்புப் பானங்களின் விற்பனையைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விரைவில் இவ்விற்பனை தடை செய்யப்படும் அல்லது இனிப்புப் பானங்கள் மீதான வரி உயர்த்தப்படும் என்றும் ஸ்டீவன்ஸ் குறிப்பிட்டார். (ஏ)

# கைது செய்யப்படுவாரா ஹிலாரி?

வொஷிங்டன், நவ.11

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஹிலாரி கிளிண்டனைக் கைது செய்து விசாரணை நடத்த வாய்ப்புள்ளதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி கிளிண்டன் பதவி வகித்த போது ராணுவத் தகவல்களை தனது சொந்த மின்னஞ்சல் மூலம் பகிர்ந்து கொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

மேலும், தேர்தல் பிரசாரத்தின்போது அவரது கிளிண்டன் அறக்கட்டளை மூலம் முறைகேடாக நிதிகளைப் பெற்றது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானார்.

எனினும், ஹிலாரி கிளிண்டன் குற்றமற்றவர் என்றும் அவர் மீது விசாரணை நடத்த முடியாது என்றும் அந்நாட்டு புலனாய்வுத் துறை இயக்குநரான ஜேம்ஸ் கேமி அறிவித்தார்.

இந்த அறிவிப்பால் அதிர்ச்சி அடைந்த டொனால்ட் ட்ரம்ப் 'ஹி லாரி பயன்படுத்திய 6,50, 000 மின்னஞ்சல்களை 8 நாள்களில் ஆய்வு செய்ய முடியாத நிலையில், அவரை எப்படி குற்றமற்றவர் என்று அறிவிக்க முடியும்? ஹிலாரி கிளிண்டன் அரசு அதிகாரிகளால் மிகக் கவனமாக காப்பாற்றப்படுகிறார்.

இந்தத் தேர்தலில் நான் வெற்றிபெற்றால் இவ்விவகாரத்தை மீண்டும் கையில் எடுத்து தனி வழக்கறிஞரை நியமித்து விசாரணை செய்வேன். ஹிலாரி மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரை சிறையில் அடைப்பேன்" என்று அதிரடியாகக் கூறியுள்ளார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் அபாரமாக வெற்றி பெற்றுள்ளார்.



மேலும், அவர் ஏற்கனவே கூறியதுபோல ஹிலாரி கிளிண்டனை விசாரணை செய்ய தனியான வழக்கறி ஞர் நியமிக்கப்படவுள்ளார் என்று நேற்று முன் தினமே தகவல்கள் வெளியாகின.

இதுபோன்ற ஒரு சூழலில் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளரான ஜோஸ் எர்னஸ்ட் என்பவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார்.

இதன்போது, பல்வேறு குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள ஹிலாரி கிளிண்டனுக்கு தற்போதையை ஜனாதிபதி ஒபாமா பொதுமன்னிப்பு வழங்குவாரா?' எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அவர் பதிலளித்த போது, 'தற்போது மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வரும் சில கைதிகளுக்கு ஜனாதிபதி ஒபாமா பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். ஆனால், குறிப்பிட்டநபர்களுக்கு(ஹிலாரிஉட்பட) பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் எந்த ஆலோசனையும் மேற்கொள்ளவில்லை' எனத் தெரிவித்துள்ளார்.

ஒருவேளை ஹிலாரிக்கு ஒபாமா தனது அதிகாரத்தை பயன்படுத்தி பொதுமன்னிப்பு வழங்கினால் அது ஹிலாரி மீதுள்ள அனைத்துக் குற்றச் சாட்டுகளுக்கும் பொருந்துமா? என்ற சந்தேகத்தை அரசியல் வல்லுநர்கள் எழுப்பியுள்ளனர்.

எனினும், கைது செய்யப்படுவதற்கு முன்னதாகவே தனக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று ஹிலாரி கிளிண்டன் கோரிக்கை விடுத்தாலும் அல்லது கோரிக்கையை விடுக்காமல் இருந்தாலும், ஹிலாரிக்கு நிச்சயமாக ஒபாமா பொதுமன்னிப்பு வழங்க வாய்ப் புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏனெனில், கடந்த 1974ம் ஆண்டு ஜெரால்ட் போர்ட் தனது ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்னதாக பல்வெறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ரிச்சர்ட் நிக்ஸனுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

எனினும், தற்போது ஹிலாரி கிளிண்டன் மீதுள்ள குற்றச் சாட்டுகளுக்கு ஒபாமா பொது மன்னிப்பு வழங்கினாலும், சில வாரங்களில் பதவி யேற்க உள்ள ட்ரம்பின் புதிய அரசு வேறு வழக்குகளை ஹிலாரி மீது சுமத்தினால் அவற்றில் இருந்து அவர் தப்புவது கடினம் என அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஏ)

## ஏ.ரி.எம். இல் திருடிய மூவர் அகப்பட்டனர்

வவுனியாவில் பல காலமாக வங்கிகளிலுள்ள இலத்திரனியல் பணப் பரிமாற்றத்தில் திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் நால்வர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.


வவுனியாவில் அண்மைக் காலங்களாக வங்கிகளிலுள்ள ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் அபகரிக்கப்படுகிறது என்று கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஐ.பெரேரா தலைமையில் பொலிஸார் இரகசியமாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது திருட்டுச் செயலில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்களை பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வெளிநாட்டில் வசித்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். (ஐ-100)

# அதிகாரம்மிக்க அரசியல் பலத்தைத் தந்தால் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்

## சிலாவத்தை மக்களுடனான சந்திப்பில் டக்ளஸ் தேவானந்தா



முல்லைத்தீவு, நவ.11

அதிகாரம் மிக்க அரசியல் பலம் கிடைத்தால் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு சிலாவத்தை தியோநகர் மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழருக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்றும், நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் வழிமுறைகளுக்கூடாகத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் நீண்டகாலமாகவே வலியுறுத்தி வருகின்றோம்.

நாம் எடுத்துக்கொண்ட ஜனநாயக அரசியல் வழி முறைகள் மூலம் மக்களுக்கு முடியுமான வரை நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

மக்களின் வறுமை நிலையை எமது சொந்த அரசியல் சுக போகங்களுக்காகப் பயன்படுத்துவோர் நாங்கள் அல்லர்.

எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மக்களுக்காகக் களத்தில் இறங்கிச் செயற்பட்டு வருகின்றோம்.

எமது இனத்தின் நிரந்தர வாழ்வியலுக்கு மக்கள் நலன் சார்ந்த தேடலுக்குரியவர்களைத் தமிழ் மக் கள் தமது அரசியல் தலைமைகளாக அதிகாரத்துக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறானதோர் அரசியல் பலத்தைத் தமிழ் மக்களாகிய நீங்கள் எமக்குத் தருவீர்களானால் நிச்சயமாக உங்கள் வாழ்வாதாரத்தையும், ஒளிமயமான எதிர்காலத்தையும் உருவாக்கித் தருவோம் என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சிலாவத்தை, தியோ நகர மக்கள் வீதிப்புனரமைப்பு, விளையாட்டு மைதானம், சுயதொழில் வாழ்வாதார உதவி, கடற்றொழில் மேம்பாட்டுக்கான உதவி ஆகிய தமது அடிப்படைத் தேவைகளையும் தமக்குப் பெற்றுத் தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இவை குறித்து ஆவன செய்வதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். (இ-7)

# வவுனியாவில் முதியோர் தின நிகழ்வு





வவுனியா, நவ.11

வவுனியா மகிழ்வோர் மன்றத்தில் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றன.

மகிழ்வோர் மன்றம் என்னும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களமும் மாவட்ட முதியோர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு இரண்டு கட்டங்களாக நடை பெற்றது.

வவுனியா பிரதான பஸ் நிலையத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வைத் தொடர்ந்து பஸ்ஸில் முதியோர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கி அதற்கு ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து பஸ் நிலையத்தில் இருந்து முதியோர் தின விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி வவுனியா நகரம் ஊடாக நகரசபை கலாசார மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு அரங்க நிகழ்வுகள் முதியோர்கள், இளைஞர்கள், யுவதிகளின் பங்களிப்புடன் நடைபெற்றன.

வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, செ.மயூரன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், மாவட்ட உதவி தேர்தல் அத்தியட்சகர், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், விவசாயக் கல்லூரி மாணவர்கள், முதியோர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பெரும் எண்ணிக் கையானோர் கலந்து கொண்டனர். (ஐ-100)



பிரித்தானியா வாழ் தாயக செயற்பாட்டாளர்களான தாமோதரம்பிள்ளை மயூரன், அன்னலிங்கம் ரமேஷ் ஆகியோரின் நிதி ஒருங்கிணைப்புடன் முன்னாள் போராளிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான உதவித்திட்டம் அண்மையில் கிளிநொச்சியிலுள்ள 'அறிவகம்' அலுவலகத்தில் இடம் பெற்றது

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்குமாகாண சபை உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-30-40)

# ஈழத்து உறவுகளுக்கு புலம்பெயர்ந்தோர் உதவி





முல்லைத்தீவு, நவ.11

இறுதி யுத்தத்தில் பல இன்னல்களைச் சந்தித்து தங்களின் வாழ்வை நடத்த முடியாத நிலையில் இருக்கும் ஈழத்து உறவுகளுக்குப் புலம்பெயர் தேசத்து வாழ் ஈழத் தமிழ் மக்கள் மனிதநேயப் பணிகள் செய்து வருகின்றனர்.

அதன் ஒரு படியாக கனடா வாழ் தமிழ் உறவுகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும், வறிய நிலை மாணவர்களின் கல்வியை உயர்த்தும் நோக்குடனும் கனடா மொன்றியல் அமைப்பின் ஊடாக அண்மையில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் வேண்டுகோளுக்கு அமைய கனடா மொன்றியல் அமைப்பின் ஊடாக ஈழத் தமிழ் உறவான தனபாலசிங்கம் ரமேஸ் என்பவரால் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் வசிக்கும் முன்னாள் போராளியான விஜயகுமார் மேரிபிலோமினா என்பவருக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வளர்ப்பு பசுமாடு வழங்கப்பட்டது.

காந்தன் வில்வரத்தினம் என்பவரால் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

வன்னேரிக்குளத்தில் வசிக்கும் பரமநாதன் மல்லிகாதேவி என்பவரின் விவசாய நடவடிக்கைகளுக்கு நமச்சிவாயம் பாலாம்பிகை நினைவாக அவரது மகன் நித்தியானந்தனால் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் அதற்குத் தேவையான மின்னினால் நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டது.

அண்மையில் கிளிநொச்சி அறிவகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். பசுபதிப்பிள்ளை மற்றும் அருட்தந்தை அமலதாஸ், உதவித்திட்டத்தைப் பெறும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-81)

# இலங்கைக்கு எதிரான கிரிக்கெட்டில் இங்கிலாந்து மகளிர் வெற்றி!




இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று 4 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து மகளிர் அணி 4 போட்டிகள் கொண்ட ஒருநாள்த் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

இத் தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவுசெய்தது.

அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, இங்கிலாந்து மகளிர் அணியின் பந்து வீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது தட்டுத்தடுமாறி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஹசனி பெரேரா மற்றும் நிபுனி ஹன்சிஹா ஆகியோர் தலா 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பேர்ண்ட் மற்றும் நைட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கிலாந்து மகளிர் அணி 29.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அணித் தலைவி நைட் ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களையும் சிவர் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் சாமரி அத்தப்பத்து மற்றும் இநோக்கா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நாளை கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுத் விளையாட்டுக் கழகம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

அச்சுவேலி, நவ.11

அச்சுவேலி தெற்கு யுத் விளையாட்டுக் கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழாவையும் மைதானத்திறப்பு விழாவையும் முன்னிட்டு கரப்பந்தாட்டாச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் யுத் விளையாட்டுக் கழக மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றுள்ளது.

யுத் விளையாட்டுக்கழகத் தலைவர் த.றதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார்.

இந்தக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவுக்கான போட்டியில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலாவது சுற்றில் 25:22, இரண்டாவது சுற்றில் 18:25, மூன்றாவது சுற்றில் 25:18, நான்காவது சுற்றில் 25:19 என்ற அடிப்படையில் மூன்று சுற்றுக்களிலும் முதலிடத்தைப் பெற்று உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. ஆட்ட நாயகனாக நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் வசீகரன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த A பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலாவது சுற்றில் 25:20, இரண்டாவது சுற்றில் மூன்றாவது சுற்றில் 25:7, நான்காவது சுற்றில் 25:22. என்ற அடிப்படையில் மூன்று சுற்றுக்களிலும் ஆவரங்கால் இந்து இளைஞர் கழக அணி முதல் நிலை பெற்று வெற்றி வாகை சூடிக்கொண்டது.

இப்போட்டிக்கான சிறந்த ஆட்ட நாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரர் றொசான் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆசிய கனிஷ்ட ரக்பி தொடருக்கான இலங்கை அணி வீரர்கள் தெரிவு




ஆசிய கனிஷ்ட ரக்பி தொடருக்கான 39 வீரர்களைக் கொண்ட இலங்கை அணியின் குழாமொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை மலேசியாவில் இடம்பெறவுள்ள 20 வயதுக்கு உட்பட்ட ஆசிய கனிஷ்ட ரக்பி தொடர் இடம்பெறவுள்ளது.

2015/16 ஆம் ஆண்டு பருவகாலப் போட்டிகள், கடந்த செவ்வாய்க்கிழமை ஹெவலொக் மைதானத்தில் இடம்பெற்ற கொழும்பு பாடசாலைகளை ஒன்றிணைத்த அணி மற்றும் கண்டி பாடசாலைகளை ஒன்றிணைத்த அணி என்பவற்றுக்கு இடையிலான போட்டி ஆசியவற்றில் இருந்தே இந்த 39 பேர் கொண்ட குழாமிற்கான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தற்பொழுது தெரிவாகியுள்ள குழாமில் கொழும்புப் பாடசாலைகளின் வீரர்கள் 27 பேரும், கண்டி பாடசாலைகளின் வீரர்கள் 12 பேரும் உள்ளடங்குகின்றனர்.

நேற்று முன்தினம் இந்தக் குழாமின் விவரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கான பயிற்சிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த இளம் இலங்கை அணிக்கான பயிற்சிகளை, இறுதிப் பருவ காலத்தில் இசிபத்தான கல்லூரியின் பயிற்சியாளராகச் செயற்பட்ட நில்பர் இப்ராஹிம் வழங்கவுள்ளார்.

## தேசிய மட்ட எறி பந்துப் போட்டிகளில் ஏறாவூர் பாடசாலை அணிகள் முன்னிலை





தேசிய மட்ட எறி பந்துப் போட்டிகளில் ஏறாவூர் பாடசாலை அணிகள் முன்னிலை வகிக்கின்றன.

கடந்த வாரம் தேசிய எறி பந்து சம்மேளனத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட எறி பந்து சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச பாடசாலைகள் அதிக ஆதிக்கம் செலுத்தி பல வெற்றிகளைப் பெற்றுள்ளன.

இந்த தேசிய மட்டப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை வெவரவெவ திஸ்ஸமகாராம மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன. இதில் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மிகவும் சிறந்த எறி பந்து அணிகள் பங்கு கொண்டிருந்தன.

இச்சுற்றுப் போட்டியில் 15 வயதின் கீழ் பிரிவு போட்டிப் நிகழ்ச்சிகளில் தேசிய மட்டத்தில் 'பி' பிரிவில் உள்ள 13 பாடசாலை அணிகள் கலந்து கொண்டன.

இதன் இறுதிப் போட்டி ஏறாவூர் றகுமானியா மகா வித்தியாலய அணிக்கும், வெல்லவாய குமாரதாஸ மகா வித்தியாலய அணிக்குமிடையில் நடைபெற்றது.

போட்டியின் நிறைவில் 25:16, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஏறாவூர் றகுமானியா மகா வித்தியாலய அணி முதல் இரண்டு சுற்றையும் வெற்றிகொண்டு 15 வயதின் கீழ்ப் பிரிவின் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

எறி பந்துப் போட்டி நிகழ்ச்சியில் கிழக்கு மாகாணப் பாடசாலை ஒன்று முதலாம் பிரிவில் தேசிய மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

### விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

கரவெட்டி, நவ.11

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச் செயலகமும் சிவன் அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் இந்தக் கலந்துரையாடல் நாளை மு.ப 10 மணிக்குக் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் எதிர்கால வளர்ச்சி மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் இந்தக் கலந்துரை யாடல் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு ஒவ்வொரு கழக தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஸிம்பாப்வேக்கு சிம்ம சொப்பனமானார் ஹேரத்

## 2–0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது இலங்கை

ஹராரே, நவ.11

இலங்கை–ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 257 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 504 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 09 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், ஸிம்பாப்வே அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 272 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனடிப்படையில் இலங்கை அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 257 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் 2 – 0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

ஸிம்பாப்வே அணிக்கு எதிரான இந்த டெஸ்ட் போட்டியில் ஐந்து விக்கெட் வீழ்த்தி இலங்கை அணியின் ரங்கன ஹேரத் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார் .




இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் அணித்தலைவர் ரங்கன ஹேரத் 89 ஓட்டங்களை கொடுத்து ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன் மூலம் 38 வயதான இடது கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத், டெஸ்ட் போட்டிகளில் பங்கு பெறும் ஒன்பது அணிகளுக்கு எதிராக ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

மேலும் இந்த ஆண்டில் அதிகமான டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பற்றிய வீரர்கள் வரிசையில் அஸ்வினை பின்னுக்குத் தள்ளி ஹேரத் முதலிடம் பிடித்தார். இதற்கு முன்னர் முத்தையா முரளிதரனும், தென்னாபிரிக்காவின் டெயில் ஸ்டெயினும் இந்த சாதனையை செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை– ஸிம்பாப்வே அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஹராரே சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

முதல் போட்டியில் வெற்றி பெற்றதைப் போல் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் ஆரம்பத்திலிருந்தே இலங்கை அணி ஆதிக்கம் செலுத்தியது.

ஸிம்பாப்வே அணிக்கு இமாலய வெற்றியிலக்காக 491 ஓட்டங்களை நிர்ணயித்த இலங்கை அணி, பந்து வீச்சிலும் ஸிம்பாப்வே அணியை மிரட்டி வருகின்றது.

இரண்டாவது இன்னிங்ஸை நேற்று முன்தினம் நான்காவது நாள் உணவு இடைவேளைக்கு பின்னர் ஆரம்பித்த ஸிம்பாப்வே அணிக்கு இலங்கை அணித்தலைவர் ஹேரத் சிம்ம சொப்பனமாக விளங்கினார். அவரின் பந்துக்கு முகங்கொடுக்க முடியாமல் ஸிம்பாப்வே அணி ஆரம்பத்திலேயே தடுமாறியதுடன், முதல் விக்கெட்டை 16 ஓட்டங்களுக்கு இழந்தது.

முதல் இன்னிங்ஸில் 80 ஓட்டங்களை பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய ஸிம்பாப்வே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் செரி 8 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்தில் ஆட்டமிழக்க, மவோயோ 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் அடுத்தடுத்து வந்த வீரர்களும் சீரான இடைவெளியில் ஆட்டமிழக்க, ஸிம்பாப்வே அணி நான்காவது நாள் ஆட்டநேர முடிவின் போது விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நேற்று இடம்பெற்ற இறுதி நாள் ஆட்ட முடிவில் மொத்தமாக 505 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. எனவே இலங்கை அணி 257 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

## முதல் இன்னிங்ஸில் 537 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து



ராஜ்கோட், நவ.11

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 537 ஓட்டங்களைக் குவித்தது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ராஜ்கோட்டில் ஆரம்பமாகியது.

நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களைக் குவித்தது. மொயின்அலி 99 ஓட்டங்களுடனும், பென் ஸ்டோக்ஸ் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடைபெறுகிறது. இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள். முதல் ஓவரை முகமது சமி வீசினார். இதில் 3 ஆவது பந்தில் மொயின் அலி ஒரு ஓட்டம் எடுத்து சதத்தை பூர்த்தி செய்தார். அவர் 195 பந்தில் 9 பவுண்டரியுடன் சதம் அடித்தார்.

33 ஆவது டெஸ்டில் விளையாடும் மொயின் அலிக்கு இது 4 ஆவது சதமாகும். உமேஷ்யாதவ் வீசிய அடுத்த ஓவரில் மொயின் அலி மூன்று பவுண்டரிகள் விரட்டினார். பென்ஸ்டோக்ஸ் அதிரடியாக விளையாடினார்.

மொத்த ஓட்ட எண்ணிக்கை 343 ஆக இருந்தபோது மொயின்அலி ஆட்டமிழந்தார். முகமதுசமி பந்தில் போல்ட்டு ஆன அவர் 117 ஓட்டங்கள் (213 பந்து, 13 பவுண்டரி) எடுத்தார். அடுத்து பேர்ஸ் டோவ் களம் வந்தார். அதிரடியாக ஆடிய பேர்ஸ்டோவ் 46 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் உணவு இடைவேளையின்போது இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்பிற்கு 450 ஓட்டங்கள் என வலுவான நிலையில் இருந்தது. பென் ஸ்டோக்ஸ் சதத்தை நெருங்கினார்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் வோக்ஸ் 4 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ரஷித் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் பென் ஸ்டோக்ஸும் சதம் அடித்து அசத்தினார். அவர் 128 ஓட்டங்களைச் சேர்த்து உமேஷ் யாதவிடம் விக்கெட்டை இழந்தார். கடைசி விக்கெட்டாக அன்சாரி 32 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் 537 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

இந்தியா தரப்பில் ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளும், ஷமி, உமேஷ் யாதவ், அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் எடுத்தனர். அமித் மிஸ்ரா ஒரு விக்கெட் எடுத்தார். இதையடுத்து இந்தியா தனது முதல் இன்னிங்ஸை தொடங்கியது.




## தென்னாபிரிக்க வீரர் ரொபின் பீற்றர்சன் ஓய்வு

பிட்டோரியா, நவ.11

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ரொபின் பீற்றர்சன் சர்வதேச போட்டி மற்றும் அனைத்து கிரிக்கெட்டிலும் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரரான இவர் சர்வதேச போட்டி மற்றும் முதல்தர போட்டி என அனைத்து கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2002 ஆம் ஆண்டு அறிமுகமான ரொபின் பீற்றர்சன் 15 டெஸ்ட், 79 ஒரு நாள் போட்டி, 21 இருபது ஓவர் போட்டிகளில் விளையாடி உள்ளார். சர்வதேச போட்டிகளில் 137 விக்கெட்டுக்களை வீழ்த்தி உள்ளார்.

# மன்னார் பெரியகுஞ்சுக்குளத்தில் மண் அகழ இடைக்காலத் தடை

## மன்னார் நீதிவான் நேற்று மாலை உத்தரவு



மன்னார் - மடு பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட பெரிய குஞ்சுக்குளம், மாதா கிராமம் ஆகிய பகுதிகளில் இடம் பெற்று வரும் கிரவல் மண் அகழ்வை உடனடியாக இடைநிறுத்துமாறு மன்னார் நீதிவான் ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா நேற்று வியாழக்கிழமை மாலை உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி மண் அகழ்வுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி தொடர்பாக மடு பிரதேச செயலகத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

மன்னாரின் மேற்படி பகுதிகளில் இடம்பெறும் கிரவல் மண் அகழ்வுகளால் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தனர்.

இதற்கமைய அந்தப் பகுதிக்கு நேற்று மாலை நேரடியாக விஜயம் செய்த நீதிவான், சட்டவிரோத கிரவல் மண் அகழ்வை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பெரியகுஞ்சுக்குளம் மற்றும் மாதாகிராமம் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கிரவல் மண் அகழ்வு இடம்பெறுகின்றது. இது தொடர்பாக அப்பிரதேச மக்கள் பல்வேறு தரப்பினரிடம் முறைப்பாடு செய்தபோதிலும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்தப் பகுதியில் கிரவல் மண் அகழ்வதற்கு மடு பிரதேச செயலகத்தால் தனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள நபர் ஒருவர் தினமும் பல டிப்பர்களில் கிரவல் மண் ஏற்றிச் செல்கின்றார் என மக்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு எதிராக மக்கள் போராட்டங்கள் நடத்தியும் அது நிறுத்தப்படவில்லை.

இந்த நிலையிலேய மக்கள், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-70)

# போக்குவரத்து விதி மீறுவோருக்கு ஆகக்குறைந்த தண்டம் ரூ.2,500



யாழ்ப்பாணம், நவ.11

போக்குவரத்து ஒழுங்குகளை மீறும் வாகனங்களுக்கு விதிக்கப்படும் ஆகக்குறைந்த தண்டப் பணத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டள்ளது.

இந்தத் தண்டப் பணத்தை தொலைபேசி மூலம் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்ப ட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது போக்குவரத்துச் சட்டத்தை மீறும் வாகனத்துக்கான குறைந்த பட்ச தண்டப்பணம் 500 ரூபாவாகக் காணப்படுகின்றது. (ம)

*சுகாதாரத் தொழிலாளரின் போராட்டம் தொடர்வதால்*

# யாழ். மாநகரில் கழிவுகளை அகற்ற மாற்று ஏற்பாடு குறித்து ஆராய்வு

யாழ்.மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்வதால் யாழ்.நகரம் துர்நாற்றம் வீசுகின்ற நிலையில், கழிவகற்றலுக்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றன என யாழ். மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுகாதாரத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரே தடவையில் நிரந்தர நியமனம் வழங்க முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். எங்களிடம் உள்ள ஆளணிக்கேற்ப படிப்படியாகவே நிரந்தர நியமனம் வழங்கமுடியும்.

இந்த நிலைப்பாட்டுக்கு சுகாதாரத் தொழிலாளர்கள் இணங்கினால்நாளையே(இன்று) நாங்கள் முதற்கட்டமாக 15 பேருக்குநிரந்தரநியமனம்வழங்க முடியும். அவர்களுக்கு அதுபற்றித் தெரிவித்தோம். அவர்கள் அதற்கு இணங்கவில்லை.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கழிவுகள் தேங்கியிருப்பதால்தாங்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாக இங்குள்ள திணைக்கள அதிகாரிகள், பொது மக்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் எங்களுக்கு நேரடியாகவும் கடிதம், தொலைபேசிகள் வாயிலாகவும் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இதனால், கழிவகற்றலுக்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். - என்றும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ம)

# தேநீர் விருந்து புறக்கணிப்பு

வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் நாடாளும்மன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வழமையான தேநீர் விருந்துபசாரத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வட்டு. யுவதி கடத்தல் சம்பவம்: கைதான இளைஞருக்குப் பிணை!

யாழ்ப்பாணம், நவ.11

வட்டுக்கோட்டையில் இளைஞர்கள் சிலரால் இளம் யுவதி ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வட்டு. கிழக்கு சித்தன்கேணியில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை முற்பகல் 11மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 20 வயதுடைய யுவதி கடத்தப்பட்டிருந்தார். இது தொடர்பில் வட்டுக்கோட்டைப்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மதியம் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடத்தப்பட்ட யுவதியின் வீட்டுக்கு ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள இளைஞர் ஒருவர் தென்னிலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றில் வெளிமாவட்ட இளைஞர்களுடன் வந்து யுவதியைக் கடத்திச் சென்றார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், கடத்தல்காரர்களுக்கு உதவினார் என்ற சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

இதேவேளை, கடத்தலில் ஈடுபட்ட இளைஞர்களுடன் அவர்கள் பயணம் செய்த வாகனம் வவுனியாவில் காணப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-58)

# வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அடகு வைத்த மோசடி நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ.11

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அடகு வைத்து வந்த நபர் ஒருவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:-

சாவகச்சேரிஸ்யச் சேர்ந்த நபர் ஒருவர் பல்வேறு தரப்பினரிடம் வாடகைக்கு வானங்களை பெற்று அவற்றை அடகு வைத்து பணத்தைப் பெற்று வந்துள்ளார்.

வாகன சாரதிகள் தொடர்பு கொண்டால் குறித்த முகவரியில் அவர் இல்லை என்றே தெரிய வந்துள்ளது.

இதேபோன்ற சம்பவம் ஒன்று அண்மையில் அராலி மத்தியில் இடம்பெற்றுள்ளது. அந்த நபர் அராலி மத்தியைச் சேர்ந்தவர் ஒருவரிடம் வான் ஒன்றைக் கொடுத்து 4 இலட்சம் ரூபா பணம் பெற்றுள்ளார்.

நாள்கள் கடந்த நிலையில் பணத்தை மீளப்பெறும் நோக்கில் அராலி மத்தியைச் சேர்ந்தவர் கடனாளிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார். அப்போது அந்த இலக்கம் சேவையில் இல்லை என்று தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் கடந்த 8ஆம் திகதி அவர் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சாவகச்சேரி பொலிஸாரின் உதவியையும் நாடினர்.

இந்த நிலையில், குறித்த வாகனத்தை அடகுவைத்தவர் என்று கூறப்படும் நபர், சாவகச்சேரி பொலிஸாரால் இவ்வாறான பிரச்சினைகளுக்காக ஏற்கனவே கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் என்பது தெரிய வந்துள்ளது.

அராலியில் அடகு வைக்கப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த மோசடி நபர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரின் மோசடிகள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ- 58)

# ட்ரம்ப் வெற்றி... (6ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அதிர்வுகளால் அசையாத ட்ரம்ப்

பலரை அவமானப்படுத்தினார் என்றும் ஊடகங்களைப் பகைத்துக் கொண்டார் என்றும் விமர்சிக்கப்பட்டார். பெண்களை பாலியல் ரீதியாக ஈர்க்க முயன்றார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இப்படி பல குற்றச்சாட்டுக்கள் டிரம்பை கடுமையாகவும், வேகமாகவும் தாக்கின. ஆனால், உறுதியான குணம் கொண்ட ட்ரம்ப், அதனால் அதிர்ந்து போய் விடவில்லை. குண்டு துளைக்காத ஆடை அணிந்தவரைப் போல, அந்தத் தாக்குதல்களும் அவர் மீது பட்டுத் தெறித்துவிட்டன.

### அந்நியர்

ஜனநாயகக் கட்சியினருக்கு எதிராகப் போராடினார். தனது கட்சியில் உள்ள செல்வாக்கு மிக்க சக்திகளுக்கு எதிராகவும் போராடினார். எல்லோரையும் வென்றுவிட்டார்.

அவரது அந்தப் போராட்டக் குணமே, ட்ரம்புக்குக் கூடுதல் பலத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது. ஜனநாயகக் கட்சியின் சார்பில் பூர்வாங்கச் சுற்றில் மோதிய பெர்னி சேன்டர்ஸ், டெட் க்ரூஸ் உள்ளிட்ட தேசிய அரசியல்வாதிகள் வாக்காளர்களின் மன நிலையை ஓரளவு அறிந்திருந்தார்கள். ஆனால், டிரம்பை போல யாரும் முழுமையாக அறிந்து வைத்திருக்கவில்லை.

### ஹிலாரிக்கு வந்த மின்னஞ்சல் சோதனை

ஹிலாரி கிளிண்டன், தனியார் 'சேர்வர்கள்' மூலமாக, தனது மின்னஞ்சல்களைப் பயன்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விடயத்தில், எவ்.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்துவதா, இல்லையா என்ற குழப்பமும் இதில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது.

பிரசாரம்நடந்துகொண்டிருந்த போது, சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு, கிளிண்டன் மீதான விசாரணையை மீண்டும் துவக்கப் போவதாக எவ்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் கோமி அறிவித்தார்.

அப்போதிருந்து ட்ரம்ப் தனது பிடியை இறுக்கத் துவங்கினார். அவரது பிரசார வேகம், எடுத்து வைத்த கருத்துக்கள் ஆகியன அதிக ஆதரவாளர்களை அவரது பக்கம் கொண்டு வந்தன.

அடுத்த இரு வாரங்களில், எவ்.பி.ஐ. நிலையை மாற்றிக் கொண்டது. ஹிலாரிக்கு எதிராக விசாரணை நடத்தப்போவதில்லை என ஜேம்ஸ் கோமி அறிவித்தார்.

ஹிலாரி, தனது அதிகாரப்பூர்வ பணிகளுக்கான மின்னஞ்சல்களுக்கு அரசாங்க 'சேர்வர்களை"ப் பயன்படுத்தியிருந்தால் இந்தச் சிக்கல் எழுந்திருக்காது. அந்த சுமை அவரது தோள்களை விட்டு இறங்கவில்லை.

### உள்ளுணர்வை நம்பினார்

அரசியல்மரபுகளுக்குமாறான பிரசார யுத்திகளை மேற்கொண்டார் ட்ரம்ப். ஆனால் அதன் நுணுக்கங்களை, நிபுணர்களை விட கூடுதலாகவே தெரிந்து வைத்திருந்தார்.

நெருங்கவே முடியாது என்று அரசியல் விமர்சகர்களால் கூறப்பட்ட விஸ்கான்சின், மிச்சிகன் போன்ற மாகாணங்களில் மாபெரும் பேரணிகளை நடத்தினார் ட்ரம்ப். ஆனாலும், ஹிலாரியின் பிரசாரத்துடன் ஒப்பிடுகையில் டிரம்பின் பிரசாரம் சிறுபிள்ளைத்தனமாக இருப்பதாகப் பரிகசிக்கப்பட்டது. ஆனால், சூட்சமத்தை தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார்ட்ரம்ப். கடைசியில் வெற்றி முரசைக் கொட்டியிருக்கிறார் அவர். ட்ரம்பின் நெருங்கிய வட்டம், குழந்தைகள் மற்றும் ஆலோசகர்கள், இனி வெள்ளை மாளிகையில் இருந்து, அமெரிக்காவுக்கு மட்டுமன்றி, உலக அளவில் யுத்திகளை வகுக்கப் போகிறார்கள்.

## லஞ்ச, ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டார். மேற்படி லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக முன்னர் பணியாற்றிய டில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க, அந்த ஆணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகத் தெரிவித்த விமர்சனங்களை அடுத்து, அப்பதவியிலிருந்து அண்மையில் இராஜினாமாச் செய்தார் என்பதும் -அதையடுத்து அவர் தமது பழைய பதவியான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்கு உடனடியாகத் திரும்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'பட்ஜெட்'டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
* மரக்கறி மற்றும் பழவகைகளை உற்பத்தி செய்வதற்கு, அரசாங்கத்தினால் 20 ஆயிரம் ஏக்கர் காணிகள் வழங்கப்படும். இதற்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

* விவசாயப் பொருட்களின் இறக்குமதிக்காக சேர்க்கப்பட்டுள்ள சில வரிகளை நீக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* 15 ஆயிரம் உயர்தர பால் மாடுகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை. அதில் ஒவ்வொரு விவசாயிக்கும் 10 மாடுகள் வீதம் வழங்க நடவடிக்கை. இதற்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

* 400 கிராம் பால்மா பைக்கெட் ஒன்றுக்கு 295 ரூபா கட்டுப்பாட்டு விலை.

* வடமேல் மாகாண பல்கலைக் கழகத்தில் உணவுப் பிரிவு கற்கை நெறி ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

* விவசாயத்துறை சார்ந்த செலவினங்களுக்காக 200 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

* மேலும் விவசாயக் கூட்டுறவு அமைப்பின் ஊடாக 75 சதவீத வட்டி சலுகை வழங்கும் நோக்கில் 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார ரீதியாக காணப்படும் வித்தியாசம் 2020ஆம் ஆண்டளவில் சீர்செய்யப்படும்.

* மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு 1200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

* கோழி இறைச்சிக்கு அதிகூடிய சில்லறை விலை கிலோகிராம் ஒன்றுக்கு 420 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* கல்வி அபிவிருத்திக்கு மேலதிகமாக 17,840 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2014ம் ஆண்டை விட 70 வீத அதிகரிப்பாகும்.

* 2020 இல் 50 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுவர்.

*175,000 உயர்தர மாணவர்கள் மற்றும் 28,000 ஆசிரியர்களுக்கு இலவச 'டப்லட்' கணினி வழங்குவதுடன், இதற்காக 5,00 ரூபா கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 'வைபை' வசதிகளை வழங்குவதற்கு தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

* வருட இறுதிக்குள் நாட்டில் உள்ள 1000 பாடசாலைகளில் மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

* மேலும் பாடசாலைகளில் வகுப்பறை மற்றும் கட்டிடங்களை கட்டுவதற்காக 2 ஆயிரத்து 100 கோடி ரூபா ஒதுக்கீடு. ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் 50 கணினிகளை வழங்க நடவடிக்கை.

* விசேட தேவையுடைய சிறார்களுக்கான நாளாந்த கொடுப்பனவு 150 ரூபாவாக அதிகரிப்பு.

* 5 முதல் 19 வயதுடைய பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான காப்புறுதி வழங்க நடவடிக்கை.

*பல்கலைக்கழக மாணவர்களின் விளையாட்டு, கலை போன்ற துறைகளுக்கு 10கோடி ரூபா ஒதுக்கீடு.

* தனியார் நிறுவனங்களின் ஊடாக பட்டப்படிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை. இதற்காக பல தனியார் கல்வி நிறுவனங்களை நாட்டில் உருவாக்கத் திட்டம்.

* தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் 15,000 மாணவர்களுக்கு 8 லட்சம் ரூபா வரை கடன் உதவி.

*தெரிவு செய்யப்பட்ட பல்கலைக் கழகங்களில் உயர் பெறுபேறுகளைப் பெறும் 3 மாணவர்களுக்கு ஹாவர்ட், கேம்பிரிஜ் மற்றும் எம்.ரி.ஐ. பல்கலைக்கழகங்களில் பட்ட மேற்படிப்புக்கான புலமைப் பரிசில்கள்.

*சர்வதேச மாணவர்களுக்கு 5 வருடத்திற்கான பல தடவை அனுமதி விசா.

* பல்கலைக்கழக விரிவுரை நேரத்தை இரவு 08 மணிவரை நீடிக்க நடவடிக்கை.

* கராப்பிடிய மருத்துவமனையில் பத்து மாடிக் கட்டமொன்றை நிர்மாணிக்க 50கோடி ஒதுக்கீடு.

* சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்குவதற்காக 50கோடி ரூபா ஒதுக்கீடு. வங்கிக்கடன்களில் நூற்றுக்கு 10 வீதத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு ஒதுக்கத் திட்டம். இவர்களுக்கு 250 முதல்750 மில்லியன் ரூபா வரை கடன் வழங்கத் திட்டம்.

* சர்வதேச முதலீடுகளுக்காக ஐந்தாண்டு சலுகை விசா. 250 இற்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களுக்கு 3 முதல் 5 ஆண்டு வரி நிவாரணம்.

* அனைத்து மருந்தகங்களும் பதிவு செய்யப்படுவது கட்டாயம். அனைத்து வர்த்தக நிலையங்களையும் இரவு 11 மணி வரை திறப்பதற்கு யோசனை.

* அதிதொழில்நுட்ப இயந்திரங்கள் இறக்குமதிக்காக நூற்றுக்கு 75 வீத வரி நிவாரணம்.

* பெருநகரங்கள் அமைச்சுக்கு 750 கோடி ரூபா ஒதுக்கீடு.

* ஏற்றுமதி இறக்குமதி வங்கி முறை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ஆயிரம் ரூபா கோடி ஒதுக்கீடு.

* தெற்கு அதிவேக வீதியை பதுளை வரை விஸ்தரிக்கத்திட்டம்.

* முச்சக்கரவண்டிகள் மூலமான விபத்துக்களை குறைப்பதற்காக புதிய வகை நான்கு சக்கர கார்கள் அறிமுகம். இதற்காக 1000 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு 50 வீத வட்டி நிவாரணம். மின்சாரக் கார்களை அறிமுகம் செய்வதற்காக 200 மில்லியன் ஒதுக்கீடு.

* இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேரூந்துகளை ஒன்றிணைந்த கால அட்டவணைப்படி சேவையில் ஈடுபடுத்த தீர்மானம்.

* பேரூந்து சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்களுக்காக ஓய்வூதியம் வழங்க திட்டம்.

* பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வான்கள் 32 ஆசனங்களைக் கொண்டதாக அமைய வேண்டும். அதனை ஊக்குவிப்பதற்கு வரி நிவாரணம்.

## அங்கொடவில் குண்டு மீட்பு

கொழும்பு,நவ.11

கொழும்பு அங்கொட பிரதேசத்திலுள்ள பாலம் ஒன்றுக்கு அருகில் வைத்து நேற்று வியாழக்கிழமை கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தக்குண்டை அவதானித்த மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அந்த இடத்துக்குச் சென்று குண்டைச் செயலிழக்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தெரிவாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது பிரசார இணையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

நவம்பர் 8 ஆம் திகதி காலை அமெரிக்க மக்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்லும் வரை அந்த இணையத் தளத்தில் இருந்த அச்செய்தி ட்ரம்பின் வெற்றியை அடுத்து திடீரென அவரது அந்த இணையத் தளத்தில் இருந்து காணாமல் போய்விட்டது - அல்லது விலக்கப்பட்டுவிட்டது - எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## ரி.ஐ.டியினரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸாருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் ஆகிய சம்பவங்களில் ஆவா குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் குற்றம்சாட்டியிருக்கின்றனர். அந்தக் குழுவினருடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்.குடாநாட்டில் அடுத்தடுத்து தொடர்ச்சியான கைதுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்தக் கைதுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். இதுவரை 11 பேரின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, இந்தக் கைதுகளுக்கு சரியான காரணங்கள் தெரிவிக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்திருக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-10)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாகவும் இதுவரை காலமும் அமெரிக்கா வழங்கிவந்த அழுத்தத்தில் சற்றுத் தொய்வு ஏற்படலாம்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆகப் பிந்தியதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில், முற்கூட்டியே புத்திசாதுரியமாக நாம் எடுத்த நடவடிக்கைப் போக்கு இப்போது -இப்படி பின்னடைவு ஏற்படலாம் எனக் கருதப்படும் சமயத்தில் - எமக்கு முழு அளவில் உதவுவதாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

அந்தத் தீர்மானத்தை ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றாமல், நாம் ஒரு தந்திரம் செய்தோம். அந்தத் தீர்மானத்துக்கு இலங்கையையும் முழு அளவில் இணங்கவைத்தோம். அதற்காக தீர்மான வாசகத்தில் சில மாற்றங்களுக்கு விட்டுக்கொடுத்தோம்.

அதனால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வைப்பதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்து எங்களால் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என நாம் நம்புகிறோம்.

இலங்கை அரசு மீதான அமெரிக்க அழுத்தம், தொய்வடைந்தாலும் கூட, மனித உரிமைகள் கவுன்ஸிலில் உள்ள ஏனைய நாடுகள் தொடர்ந்து உரிய அழுத்தத்தைத் தரும் என நாம் நம்புகிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை தொடர்பாகத் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தை, நடைமுறைப்படுத் தாமல், இலங்கை பின்னடிப்பதற்கு மற்றைய நாடுகள் விடப் போவதில்லை. அமெரிக்க அழுத்தம் குறைந்தாலும் கவுன்ஸிலில் உள்ள மற்றைய தரப்புகளின் அழுத்தம் தொடரும். அதனால் எமக்கு சாதகமான நிலை தொடர்ந்து நீடிக்கும் என்றே நம்புகிறேன்." - இவ்வாறு சுமந்திரன் எம்.பி. நேற்று 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

## சுமாரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தியை ஏற்படுத்துவதற்கான, நல்லாட்சி அரசின் 2ஆவது வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி. நாட்டுக்குள் நல்லிணக்கத்தையும் மக்களிடையே ஒன்றுமையையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்று ஆரம்பித்த நிதி அமைச்சர், "வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில், 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. உலகச் சந்தை யில் ஆதிக்கம் செலுத்தும் வகையில், இலங்கையின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது சார்ந்த துறைகள் மீது அதீத கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது". - என்றார்.

"அனைத்துத் துறைகளிலும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் தனியார் துறைக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். சமூக, பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலை ஏற்படுத்தி, சிறுவர்கள், இளைஞர் - யுவதிகளுக்கான சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைவருக்கும் பலன் கிடைக்கும் வகையிலான வரவு - செலவுத் திட்டமாக இது அமையும். இதற்காக, 2017 ஆம் ஆண்டு-வறுமை ஒழிப்பு ஆண்டாக ஜனாதிபதியால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

"முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன. நாட்டுக்குள் ஒரு நட்புறவுள்ள பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அடுத்த வருடத்தில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதையே நோக்கமாக கொண்டு அரசாங்கம் இயங்கவுள்ளது. 2017ஆம் ஆண்டு அபிவிருத்திக்கான ஆண்டாகும்". - என்றார் நிதி அமைச்சர்.

தன்னியக்க டெலர் இயந்திரங்கள் மூலம் பணம் மீளப்பெறுவதற்கான கட்டணம் 10 ரூபாவாக அதிகரிக்கப்படும். இணையத் தளப் பரிமாற்றங்களுக்கு வரி அற விடப்படும். பழைய வாகன ஏற்றுமதிக்கு வரிச்சலுகை. 100 பொருள்களுக்கான தீர்வை குறைப்பு. இலத்திரனியல் மோட்டார் வாகனங்களுக்கான வரி குறைக்கப்படும். பழைய வாகன ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படும். சமுர்த்தி பயனாளிகளுக்கு மாதாந்தம் 5 கிலோ அரிசி வழங்கப்படும். - என்றார் நிதி அமைச்சர்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.